Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி -23 09-11-2003 ஞாயிற்றுக்கிழமை ஓசை 264



படச்சுருள்கள் அனைத்தையும் கணினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB

Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள், கணினி முறை வீடியோ மிக்சிங், பாடல் பதிவுகள், அனைத்திற்கும்

R.V.G.பந்தல் சேவை தர்மபுரம் (சி-8689) யாழ் சாலை, கிளிநொச்சி.


# அமைச்சுக்களை மீள ஒப்படைக்கும் வரையில்

# சனாதிபதியுடன் சமரசத்திற்கு இடமில்லை!

## தேசிய அரசு ஆலோசனை ஐ.தே.கட்சியால் நிராகரிப்பு

(கொழும்பு)

**சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் பறிக்கப்பட்ட மூன்று அமைச்சுக்களும் மீள தம்மிடம் ஒப்படைக்கும் வரை எவ்வித மான விட்டுக்கொடுத்தலுக்கும் சனாதிபதியுடன் இணங்கப் போவ தில்லையென ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. அத்துடன் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தேசிய அரசு ஆலோசனை யையும் ஐ.தே.க. நிராகரித்துள்ளது.**

இது குறித்து ஐ.தே.கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளதாவது,

"மக்கள் அளித்த ஆலோசனைக்கு விரோதமாகத்தான் சனாதிபதி நடந்துகொண்டிருக்கிறார். நாங்கள் ஒரு நிலையான ஸ்தானத்தில் இருக்கின்றோம். ஆகவே சனாதிபதியால் பறிக்கப்பட்ட மூன்று அமைச்சுக்களும் திருப்பி அவர்களிடம் வழங்கப்படும் வரை எந்தவித மான விட்டுக்கொடுத்தலுக்கும் சமரசத்திற்கும் இணங்கமாட்டோம்" என்பதே ஐக்கிய தேசியக்கட்சியின் நிலையான தீர்மானமாகும்.

முதலில் எம்மிடமிருந்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பரந்த அடித்தளம்கொண்ட அரசாங்கம்; தேசிய அரசு கோரிக்கையின் நோக்கம் அதுவே

## சனாதிபதியின் பேச்சாளர் ஹரிம்பீரிஸ்

அரசாங்கம் பரந்த அடித்தளம் கொண்டதாக இருக்கவேண்டும் என்பதற்கான கோரிக்கையே தேசிய அரசு மூலமாக சனாதிபதி விடுத்துள்ளார் என சனாதிபதியின் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் எல்லாத்தரப்பையும் உள்ளடக்கியதாக அனைவரும் பங்காற்றக்கூடியதாக இருக்க வேண்டும் என்கின்ற கருத்தாக்கத்தின் பேரில் விடுக்கப்பட்ட கோரிக்கை இது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடு அவரது திறன் குறித்த விமர்சனமாக இது வெளிவரவில்லை. ஆனால் அவரது அரசில் யார் யார் இருக்கின்றார்கள் என்பது பற்றியதாகத் தான் சனாதிபதி இதைச் சொல்லியுள்ளார் என்று ஹரிம் பீரிஸ் சனாதி பதியின் தேசிய அரசு அமைக்கும் கோரிக்கைக்கு விளக்கம் கொடுத் துள்ளார்.

# சமாதான நடவடிக்கைகளைத் தொடர பாராளுமன்றம் இயங்குவது அவசியம்

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டுமாறு சிறிலங்காவின் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கோரியுள்ளார்.

சமாதான நடவடிக்கையை மீண்டும் மேற்கொள்வதற்குப் பாராளுமன்றம் இயங்குவது அவசியம் என்று அவர் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் தொடர்பாகஅரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் செய்தியாளர் மத்தியல் நேற்று பேசும்போது தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் தெரிவித்துள்ள யோசனைகளில் தோன்றியுள்ள கருத்து வேறுபாடுகளுக்கு உடன்பாடு ஒன்றை எட்டுவதற்கு பாராளுமன்றம் முக்கிய பங்கு வகிப்பதாகத் தெரிவித்த அவர்,

சனாதிபதி இத்தகைய நடவடிக்கைகளை எடுப்பதில் அர

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆரியகுளம் சந்தி

# நாகவிகாரை உற்சவத்திற்காக பெருமளவு படைகள் குவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள நாக விகாரையின் பூரணை நாள் உற்சவத்தை முன்னிட்டு யாழ். நகரில் படையினரின் பாதுகாப்பு உசார் படுத்தப் பட்டிருந்தது.

நேற்று மாலை இடம்பெற்ற இவ் உற்சவத்தில் கலந்து கொள்ள யாழ். மாவட்ட படைத் தளபதிகளும் பெருமளவு தென்னிலங்கை சிங்கள மக்களும் கலந்து கொண்டதால் மேற்படி பாதுகாப்பு உசார் படுத்தப் பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நடவடிக்கையின்போது நகரின் பிரதான சந்திகள், வீதிகள் தோறும் ஏராளமான படையினர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

முல்லை மாவட்டத்தில் நேற்று ஏற்பட்ட எதிர்பாராத விபத்தொன்றின் போது போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

- கப்டன் வேதன்/சுதன் (நவரத்தினம்-மதிகிருஸ்ணகரன்-சில்லாலை மாதகல்-யாழ்ப்பாணம்) என்ற போராளியே சாவடைந்துள்ளார்.இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# பாராளுமன்றை உடன் கூட்ட சபாநாயகரிடம் கோர முடிவு!

(கொழும்பு)

பாராளுமன்றத்தை விரைவில் கூட்டுமாறு சபாநாயகரிடம் கூட்டாக கட்சித் தலைவர்கள் கோரிக்கை விடுக்கவுள்ளனர்.

இதற்காக அனைத்துக்கட்சித் தலைவர்களின் கூட்டம் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாக அமைச்சர் லொக்குபண்டார கூறியுள்ளார்.

"தற்போதைய நெருக்கடியான நிலையில் ஐ.தே.கட்சியின் பங்களிப்பு" என்ற தலைப்பில் நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய அமைச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கட்சித் தலைவர்கள் கூட்டம் நாளை நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்று நாளை நடைபெறவுள்ளது.

இதற்கான அறிவித்தலை சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா நாடாளுமன்றத்தில் அனைத்து கட்சித் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

நடைமுறை அரசியல் நெருக்கடி தொடர்பில் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படுவதுடன் நாடாளுமன்றத்தை மேலும் இயக்குவது தொடர்பாக பேச்சுக்கள் நடைபெறவுள்ளது.

மேலும் பொ.ஐ. முன்னணியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டம் நாளை நடைபெறவுள்ளது. இதில்விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக வரைவு தொடர்பாக ஆராயப்படவுள்ளது. (32)

# கொழும்பைவிட்டு வெளியேறாதிருக்க ஐ.தே.க.பா.உ. களுக்கு அறிவுறுத்து

அலரிமாளிகையில் நடந்த அமைச்சர்கள் கூட்டத்தில் தற் பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக இம்மாதம் 19ஆம் திகதிக்குமுன்னதாக கொழும்பில் இருந்து வெளியேற வேண்டாம் என சகல ஐக்கிய தேசிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அறிவிக்கப் பட்டுள்ளது. அத்துடன்நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக் (8ஆம் பக்கம்பார்க்க)

# நோர்வே துணை அமைச்சர் நாளை கொழும்பு வருகிறார்

(கொழும்பு)

நோர்வே நாட்டின் சமாதான ஏற்பாட்டாளர்கள் நாளை திட்டமிட்டபடி சிறிலங்கா வரவுள்ளனர்.

இவ் விஜயத்தின்போது நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்கேசன் சிறிலங்கா சனாதிபதி, பிரதமர், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

விடுதலைப்புலிகள் சிறிலங்கா அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ள இடைக்கால சட்டவரைவின்படி அடுத்த கட்ட சமாதானப்பேச்சு நகர்வுக்காகவே இவர்களது விஜயம் அமைந்துள்ளது.

# இராணுவம் மீது ரணிலின் கட்டுப்பாடு இல்லாது புலிகளுடன் சமரச முயற்சி கடினம்

## கொழும்பு பி.பி.ஸி செய்தியாளர்

(லண்டன்)

இராணுவத்தின் மீது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு கட்டுப்பாடுகள் இல்லாத சூழ்நிலையில் விடுதலைப்புலிகளுடன் சமரச முயற்சிகளை மேற்கொள்வது கடினமாகவே இருக்கும் என்று பி.பி.சி. தமிழோசையின் கொழும்பு முகவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பிற்கான அதிகாரங்களைக் கைப்பற்றியுள்ள சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க அவற்றை மீண்டும் கையளிப்பதற்கான திட்டம்எதுவும் தனக்கு கிடையாது என்றும் கூறியுள்ளது தெரிந்ததே.

இதேவேளை நோர்வேத் தரப்பின் சமாதான முயற்சியின் ஏற்பாட்டாளர்கள் என்ற தமது பங்களிப்பின் எல்லையைக்கடந்து செயற்படுகிறார்கள் என்று சனாதிபதி நினைக்

(8 ஆம் பக்கம் பார்க்க)



நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேசப்பற்றாளர் முன்னணியின் ஊர்வலம்

## வரி விளம்பரம்

### விதை உழுந்து விற்பனைக்கு

நல்ல ரக விதை உழுந்து விற்பனைக்குண்டு. திருவையாறு விவசாயக் கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி. (3855)

## கற்சிலைமடு அ.த.க.பா. முதலிடம் பெற்றது

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் கோட்ட மட்டபாடசாலைகளுக்கிடையான சரீர சுகப் பயிற்சிபோட்டியில் மு/கற்சிலைமடு அ.த.க.பாடசாலை முதலாம் இடத்தினையும், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தினையும் முத்துஐயன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன. இந்நிகழ்வு கடந்த 6ஆம் திகதி அன்று ஒட்டுசுட்டான் கோட்டக்கல்வி அதிகாரி சி.ஜெயபாலன் தலைமையில் நடைபெற்றது. (05)

## ஆவணமின்றி பாவனையிலுள்ள உந்துருளிகள் பதிவு

(அலுவலக செய்தியாளர்)

கிளி.மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் திணைக்களத்தில் தற்போது ஆவணங்கள் இல்லாது பாவனையில் உள்ள உந்துருளிகளை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த 5ஆம திகதிமுதல் 7ஆம் திகதிவரை மேற்படி திணைக்களத்தில் மேற்கொள்ளப்பெற்ற நடவடிக்கையின் மூலம் இதுவரை 189 ஆவணங்கள் இல்லாது பாவனையிலுள்ள உந்துருளிகளின் பதிவுகள் மேற்கொள்ளப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் கிளி.முல்லை மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம். (சோ)

## உருத்திரபுரம் ம. வி.க்கு அகில இல. ரீதியில் முதலிடம்



சிறிலங்கா விழிப்புலன் இழந்தோர் சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை ரீதியான கட்டுரைப் போட்டியில் கிளி/ உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த தரம் 7இல் கல்வி கற்கும் செல்வன் குணராஜா தனுஷன் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவரைப் பாடசாலைச் சமூகம் பாராட்டியுள்ளது.

### மாங்குளம் - ஒட்டுசுட்டான் வீதியில்

## இருவேறு இடங்களில் இரு வாகனங்கள் குடைசாய்வு

மாங்குளம் - ஒட்டுசுட்டான் வீதியில் இருவேறு இடங்களில் இரு வாகனங்கள் குடை சாய்ந்துள்ளன.

மாங்குளம் சந்திக்கு அண்மையில் ஒட்டுசுட்டான் நோக்கி பயணித்த பயணிகள் பேருந்து ஒன்று குடை சாய்ந்ததில் அதில் பயணித்த இருவர் காயமடைந்துள்ளனர். இதே வேளை, ஒட்டுசுட்டானுக்கும், முள்ளியவளைக்குமிடையால் பார ஊர்தி ஒன்று குடை சாய்ந்ததில் அதில் பயணித்த ஒருவர் காயமடைந்துள்ளார். (05)

## கிளி. செஞ்சிலுவைக் கிளையினால் முதலுதவிப் பயிற்சி ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளையினரால் முதலுதவிப் பயிற்சி ஆரம்பிக்கப்பெற்று நடாத்தப்பெற்று வருகின்றது.

நேற்றுக் காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் வன்னி மாவட்டசென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவு ஆணையாளர் வே. ஸ்ரீதரன் தொண்டர்களுக்கு முதலுதவிப் பயிற்சியினை வழங்கினார்.

வாரத்தில் சனி,ஞாயிறு இரு தினங்களில் நடைபெற்றுவரும் மேற்படி தொண்டர்களுக்கான முதலுதவிப் பயிற்சி நெறியில் எமது சமூகத்திற்கு சேவை புரியவிரும்பும் தொண்டர்கள் இணைந்து கொள்ளலாமென கிளி.மாவட்ட செஞ்சிலுவைச் சங்க செயலர் க. கணேஸ் தெரிவித்துள்ளார். (சோ)

## கிளி. உதைபந்தாட்டச் சங்க புதிய நிர்வாகிகள் தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் பொதுக் கூட்டம்நேற்றுப்பகல் 10.30 மணிக்கு கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் சங்க துணைத் தலைவர் கணேசபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

நேற்றைய கூட்டத்தில் பின்வருவோர் புதிய வருட உதைபந்தாட்டச்சங்க நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பெற்றனர்.தலைவர் கணேசபிள்ளை, செயலர் சு.கனகராசா, பொருளாளர் மா.சிவராசா, துணைத்தலைவர்களாக அன்ரன் அன்பழகன், இ.விக்கினேஸ்வரன், துணைச் செயலர் க.விக்கினேஸ்வரன் மற்றும் ஒன்பது நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பெற்றனர். (சோ)

## உடையார்கட்டுக் குள புனரமைப்பு முதலாவது தொகுதி வேலை ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

நிக்கோட் நிறுவன நிதியுதவியுடன் உடையார்கட்டுக்குள புனரமைப்புப்பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

35 மில்லியன் ரூபா பெறுமதியில் மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப்பெற்று தற்போது முதலாவது தொகுதிவேலை நடைபெற்று வருகின்றது.மேற்படி புனரமைப்புப்பணிகளில் தமிழர் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரின் கனரக இயந்திரங்கள் பாவனைக்குட்படுத்தப்பட்டு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன.

இக்குளவேலைகள் முழுமையாக புனரமைப்புச் செய்யப்பெறும் பட்சத்தில் வயல் நிலங்கள் மற்றும் தேராவிலை அண்மித்த பகுதிகளுக்கு ஏற்று நீர்ப்பாசன வசதிகள் கிடைக்கப்பெறுவதுடன் இதன் காரணமாக அதிக விவசாயிகள் பயனடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## வட-கிழக்கில் தொடரும் மழையால் வெள்ளம் ஏற்படும் அபாயம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக வெள்ளம் ஏற்படும் அபாயம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய சீரற்ற காலநிலை இன்றும் தொடரும் என வழி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இருப்பினும், இன்று மாலை காலநிலை சீரடைவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

### பரீட்சை வினாத்தாள்கள்

துணுக்காய் வலயக் கல்விப் பணிமனை தரம் 9ற்கான மாகாண மட்டப் பரீட்சை 2003 வினாத் தாள்களை துணுக்காய் மாந்தைக் கோட்ட பாடசாலைகள் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்திலும் ஒட்டு சுட்டான் கோட்டப்பாடசாலைகள் ஒட்டுசுட்டான் கோட்ட அலுவலகத்திலும், முல்லைத் திருமுறிகண்டி இ.வி. முல்லைக் கரிப்பட்டமுறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை முல்லை ஒலுமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைகள், முல்லை பெரிய புளியங்குளம் அரசினர் தமிழ்க் கலவன் ஆகிய பாடசாலைகள் முல்லை மாங்குளம் ம/வித்தியாலயத்திலும் பெற்றுக் கொள்ளவும்.

பரீட்சைகள் 12-11-2003 ஆரம்பமாகும் என துணுக்காய் வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் தி.கு. விஜயபாலா தெரிவிக்கின்றார். (24)

## ஊற்றுப்புலம் கிராமத்தில் பனம் விதை நடுகைத் திட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட ஊற்றுப்புலம் கிராமத்தில் கற்பகச்சோலை பனம் விதை நடுகைத் திட்டத்தின் கீழ் பனம் விதைகள் நடுகை மேற்கொள்ளப்பெற்றது.

மேற்படி கிராமத்தில் கடந்த 7ஆம் திகதியன்று கிளி.கரைச்சிப் பிரதேச செயலர் பொன். நித்தியானந்தம் தலைமையில் பனம் விதைகள் நடுகைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பெற்றது.

மேற்படி திட்டம் ஆரம்ப நிகழ்வில் மங்கல விளக்கினை பனை, தென்னை அபிவிருத்திப் பொறுப்பாளர் வி. அருள் ஏற்றிவைக்க தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியினை கிளி.மாவட்ட த.பொ.மே. நிறுவனப் பொறுப்பாளர் செந்தில் ஏற்றிவைத்தார். கிளி. பனை அபிவிருத்திச் சபை இணைப்பாளர் சிறப்புரை வழங்கினார்.

மேற்படி கிராமத்தில் 25,000 பனம் விதை நடுகையினை கற்பகச் சோலை பனம் விதை நடுகைத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)


## கேள்வி அறிவித்தல்

### மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பணிமனை முல்லைத்தீவு.

01.01.2004ஆம் திகதி தொடக்கம் 31.12.2004ஆம் திகதி காலம் முடிவடையும் வரைக்கும் கீழ்க் கூறப்படும் வைத்தியசாலைகளிற்கு கேள்விகள் எதிர்வரும் 2003.11.24ஆம் திகதி காலை 10 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினம் 11.00 மணிக்கு கேள்விகள் யாவும் திறந்து பரிசீலிக்கப்படும். சமைத்த உணவு, உலர் உணவு வழங்கல் மற்றும் அழுக்கு துணிகளை சலவைசெய்வதற்கான கேள்விகள் பத்திரம் பெற விரும்புபவர்கள் கீழ்க் கூறப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு படிவக் கட்டணத்தையும், கேள்வி வைப்புப் பத்திரத்தையும் இவ் அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

உலர் உணவு, பால் தவிர்ந்த சமைத்த உணவு பெறுவதற்கான கேள்விப் பத்திரம் பெறப்படும் போது 100000/= மேற்பட்ட 2003ஆம் ஆண்டு ஐப்பசி மாதத்திற்கு பின் பெறப்பட்ட பெறுமதி சான்றிதழ் உடன் (Worth Report) கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டவாறு வங்கியில் பெறப்பட்ட உத்தரவாத முறி சமர்ப்பித்தல்வேண்டும்.

**விபரம் வருமாறு:-**

| விடயம் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப்படிவ கட்டணம் | உத்தரவாத முறி |
|---|---|---|---|
| **அ. உலர் உணவு வழங்கல்** | | | |
| 1. மா.வைத்தியசாலை, முல்லைத்தீவு. | 2500/= | 100/= | 40000/= |
| 2. சுற்றயல் கூறு,மல்லாவி. | 2000/= | 100/= | 30000/= |
| **ஆ. பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்கல்** | | | |
| 1. ம.ம.ம.மனை, முள்ளியவளை. | 1500/= | 100/= | 20000/= |
| 2. ம.ம.ம.மனை, நட்டாங்கண்டல். | 1500/= | 100/= | 20000/= |
| 3.மாவட்ட கிளை வைத்தியசாலை, முல்லைத்தீவு. | 1500/= | 100/= | 20000/= |
| **இ. அழுக்குத்துணி சலவை செய்தல்** | | | |
| 1 மாவட்ட வைத்தியசாலை, முல்லைத்தீவு. | 1000/= | 100/= | — |
| 2. சுற்றயல்கூறு, மல்லாவி. | 750/= | 100/= | — |
| 3. மாவட்டகிளை வைத்தியசாலை, முல்லைத்தீவு. | 400/= | 100/= | — |
| 4.ம.ம.ம.மனை, முள்ளியவளை. | 400/= | 100/= | — |
| 5. ம.ம.ம.மனை, நட்டாங்கண்டல். | 400/= | 100/= | — |

மேலதிக விபரங்கள் இப் பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

ஒப்பம்
வைத்திய கலாநிதி து.வி.ஜெயக்குலராஜா,
மா.சு.சே.பி. பணிப்பாளர்,
முல்லைத்தீவு.

க.நாகேசுபரன்,
நிர்வாக உத்தியோகத்தர்,
மா.சு.சே.பி.பணிப்பாளருக்காக,
முல்லைத்தீவு.

(சி-7798)

# பயங்கரவாதத் தாக்குதல்கள் நடைபெறலாம் சவுதியிலுள்ள அமெரிக்க தூதரகத்திற்கு மூடுவிழா!

**சவுதி அரேபியாவில் பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெறலாம் என அமெரிக்கா அச்சம் வெளியிட்டுள்ளது. இதனையடுத்துத் தனது தூதரகத்தை மூடிவிட அது தீர்மானித்துள்ளது.**

சவுதி அரேபியாவில் தீவிரவாதிகளின் செயற்பாடுகள் அதிகரித்து வருவதாக அமெரிக்கா,பிரிட்டன் ஆகிய நாடுகள் குற்றச்சாட்டுக்களை ஏற்கனவே முன்வைத்துள்ள நிலையில் சவுதி அரேபியாவும் தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை முடுக்கிவிட்டிருந்தது.


பிரிட்டன் தனது பிரஜைகளை சவுதி அரேபியாவை விட்டு வெளியேறுமாறும்,அங்கு பயணம் செய்வதை நிறுத்திக்கொள்ளுமாறும் எச்சரிக்கை விடுத்திருந்த வேளை,அதற்குச் சவுதி அரேபியா கடும் கண்டனத்தை வெளியிட்டிருந்தது.

இந்நிலையில்,தீவிரவாதிகளின் செயற்பாடுகள் இனம் காணப்பட்டுள்ளன. தீவிரவாதிகள் தங்கியிருந்த இடங்கள் சில பொலிசாரினால் சுற்றிவளைக்கப்பட்ட வேளை இரு பகுதியினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றதோடு உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டுள்ளன.சவுதி அரேபியாவில் இறுதியாக நடந்த ஒரு சம்பவத்தில் இரு முஸ்லிம் தற்கொலைப் பயனாளிகள் குண்டுகளை வெடிக்க வைத்துத் தாக்கியதில் எட்டுப் பொலிசார் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளதாகச் செய்திகள் வெளியாகியிருந் தமை தெரிந்ததே.

மேற்கொண்டும் தாக்குதல்கள் எதிர்பார்க்கப்படும் நிலையில் தனது தூதரகத்தை மூடிவிட அமெரிக்கா தீர்மானித்துள்ளது. பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல்களே தூதரகம் மூடப்பட வேண்டியதற்கான காரணம் எனத் தூதரக வட்டாரங்கள் அறிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது



ஈராக்கின் மெய்டன் என்ற கிராமத்தில் அதிகாலை வேளை அமெரிக்கப் படையினர் நடத்திய தேடுதலில் கைது செய்யப்பட்ட ஈராக்கியர்கள். இவர்கள் தாக்குதல் ஒன்றின் பின் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.



ஈராக்கின் ரிக்றிட் பகுதியில் பிளாக் ஹவாக் உலங்கு வானூர்தி சுட்டு வீழ்த்தப்பட்ட இடத்தை நோக்கி முன்னேறும் டாங்கிக்கு பாதுகாப்பளிக்கும் அமெரிக்க அப்பாச்சி உலங்கு வானூர்தி.

## ஒப்புதல்

அமெரிக்கர்கள் கருக்கலைப்பு செய்யலாம் என்று சனாதிபதி புஷ் ஒப்புதல் அளித்துள்ளார். அமெரிக்காவில் இதுவரை காலமும் கருக்கலைப்பு செய்யத் தடைவிதிக்கப்பட்டிருந்தது. கருக்கலைப்பை அங்குள்ள கிறிஸ்தவர்களும் எதிர்த்து வருகின்றனர்.

# பொருளாதாரம் அபிவிருத்தியடைகிறது அமெரிக்க சனாதிபதி புஷ் அறிவிப்பு

அமெரிக்காவின் பொருளாதாரம் மீண்டும் அபிவிருத்தியடைகிறதென சனாதிபதி புஷ் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் அமெரிக்கப் படைகள் மற்றுமோர் பின்னடைவை எதிர்நோக்கியுள்ள வேளையில் அமெரிக்காவின் வேலை வாய்ப்புச் சந்தைகள் மீண்டும் விருத்தியடைய ஆரம்பித்துள்ளன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். குடியரசுக் கட்சியினர் அடுத்த வருடம் சனாதிபதி தேர்தலில் புஷ்சிற்கு ஆதரவு கிடைக்க மாட்டாதெனப் பிரச்சாரம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

என்னும் புஷ்சின் சனநாயகக் கட்சி உறுப்பினர்கள் இம்மாதம் தொடக்கம் தொடர்சியாக மூன்றாவது மாதமாக வேலை வாய்ப்புக்கள் அதிகரித்து வருவதை சுட்டிக் காட்டியுள்ளனர். புஷ் பதவியேற்ற பின்னர் 26லட்சம் பேர் தொழிலை இழந்த போதிலும் இம்மாதம் ஒரு லட்சத்து இருபத்தாறாயிரம் பேரிற்கு புதிதாக வேலைவாய்ப்புக் கிடைத் துள்ளதை அவர்கள் சுட்டிக் காட்டி யுள்ளனர்.

இருப்பினும் அமெரிக்காவின் பங்குச் சந்தையில் வர்த்தகம் வீழ்ச்சி அடைந்து வருகின்றது. புஷ் நேற்று முன்தினம் நாட்டுமக்களுக்கு உரையாற்றுகையில் ஈராக்கில் உலங்கு வானூர்தி வீழ்ந்தமை குறித்து எதுவும் கூறவில்லை.



ஈராக்கிற்கு துருக்கிப் படைகளை அனுப்ப முன்வந்துள்ளதை அடுத்து தலைநகர் இஸ்தான்புல்லில் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் துருக்கிய முஸ்லிம்கள் அமெரிக்க இஸ்ரேலிய கொடிகளை எரியூட்டுகின்றனர்.

# மணிலா விமான நிலைய கட்டுப்பாட்டு கோபுர முற்றுகை படை நடவடிக்கையால் முறியடிப்பு

## தாக்குதலில் இருவர் பலி

(மணிலா)

மணிலா விமான நிலையக்கட்டுப்பாட்டுக் கோபுரத்தைக் கைப்பற்றிய முன்னாள் விமானப் போக்குவரத்து அதிகாரி ஒருவரையும் அவரது ஆட்களில் ஒருவரையும் பாதுகாப்புப் படைகள் சுட்டுக் கொன்றமையைத் தொடர்ந்து மணிலா விமானநிலைய முற்றுகை ஒரு முடிவிற்கு வந்துள்ளது.

கட்டுப்பாட்டுக் கோபுரத்தினுள் புகுந்த இருவரும் கதவுகளை உட்புறமாக மூடிக்கொண்டிருந்தமையால் அதிரடிப் படையினர் குண்டுகளை வெடிக்க வைத்து கதவுகளைத்திறந்துஇருவரையும்சுட்டுள்ளதாக பொலிஸ் அத்தியட்சகர் கூறியுள்ளார்.

ஊழல் சம்பவங்களை ஆட்சேபித்தே தனிப்பட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு எதிர்ப்பு நடவடிக்கையாக இச் சம்பவம் அமைந்த போதிலும் பிலிப்பைன்சின் மிக முக்கியமான விமான நிலையத்தின் கட்டுப்பாட்டுக் கோபுரம் முற்றுகையிடப்பட்டமை கடந்த ஜூலை மாதத்தில் பல நூற்றுக் கணக்கான இராணுவ உயர் அதிகாரிகள் மேற்கொண்ட சதிமுயற்சியையே இது நினைவுபடுத்தியதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதனைத் தொடர்ந்து, பொலிசார் நாடெங்கிலும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். பிலிப்பைன்சில் தேசிய பொலிஸ் தலைமைக் காரியாலய வாயில்களில் தியனைக்கும் படை வாகனங்கள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

# 'சார்ஸ்' நோய்க்கான மருந்தைக் கண்டறிய இரண்டு ஆண்டு காலம் தேவைப்படலாம்

## -உலக சுகாதார நிறுவனம்

ஆட்கொல்லி நோயான சார்ஸை முற்றாக ஒழிப்பதற்கான மருந்தைக் கண்டு பிடிப்பதற்கு இரண்டு ஆண்டுகள் எடுக்குமென உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.

இதேவேளை இவ்வருட இறுதியில் மாரிகாலப் பகுதியில் மீண்டும் சார்ஸ் நோய் ஏற்படலாம் என்ற அச்சமும் நிலவி வருகின்றது. சார்ஸ் நோய்க்கான மருந்து கண்டு பிடிப்பது தொடர்பாக உலக சுகாதார ஸ்தாபனத் தலைவர் ஜெனீவாவில் மாநாடு ஒன்றை நடத்தியுள்ளார். இந்த மாநாட்டில் 15 நாடுகளிலிருந்தும் 50 ஆராய்ச்சி நிபுணர்கள் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் பேசிய உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் லீ. ஜொங்வூக், சார்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்கான மருந்தைக் கண்டு பிடிக்கும் வரை ஆராய்ச்சி தொடரும் என்று கூறியுள்ளார்.

அத்துடன் சார்ஸ் நோயைக் கட்டுப்படுத்தும் மருந்தை 2 ஆண்டுகளில் கண்டுபிடிக்க முடியும் என்றும், அப்படி முடியாது விட்டால் தமது ஆராய்ச்சிப் பணி மேலும் ஓராண்டுக்கு நீடிக்கலாம் என்றும் கூறியுள்ளார்.

அதே வேளை சுகாதார ரீதியிலான பாதுகாப்புப் பணிகள் சீராக இருந்தால் சார்ஸ் இனி ஏற்படாது தவிர்த்து விடலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# ஐ.நா.சமாதானப் படையினர் லைபீரியா செல்ல ஏற்பாடு

லைபீரியாவில் அமைதி நடவடிக்கைகளை மேற்கொள்ளவென சென்ற அமெரிக்கப்படை விலகிக் கொள்ள ஆரம்பித்துள்ளது.

ஐ.நா.வின் சர்வதேசப் படை லைபீரியாவிற்கு வருவதாக அறிவிக்கப்பட்டதை அடுத்தே அமெரிக்கப் படை விலகிக் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச படையினரை உள்ளடக்கிய ஐ.நா.படையில் 15 வீரர்கள் உள்ளனர். ஐ.நா படை லைபீரியாவில் தொடர்ந்து அமைதிப் பணியில் ஈடுபட உள்ளதாக வாஷிங்டன் தெரிவித்துள்ளது. லைபீரிய சனாதிபதி சாள்ஸ் டெய்லரை நாட்டை விட்டு வெளியேறக் கோரி அந்த நாட்டு மக்கள் விடுத்த கோரிக்கையையடுத்து டெய்லர் நாடு கடத்தப்பட்டமை தெரிந்ததே அதே நேரம் லைபீரியாவில் தற்போது சுமுக நிலை நிலவி வருவதாகக்கூறப்படுகின்றது.



இஸ்ரேலியப் படையினரால் காசாவில் கொல்லப்பட்ட 10வயது பலஸ்தீன சிறுவனின் இறுதி ஊர்வலத்தையும் மேற்குக் கரையில் பலஸ்தீன இளைஞர்கள் இஸ்ரேலிய டாங்கிமீது கற்களை வீசித் தாக்குவதையும் படங்களில் காண்க.

# சூடான் யுத்த நிறுத்தத்தால் அதிக பயன் கிடைக்கவில்லை

## ஐ.நா.சபை கவலை

மேற்கு சூடானில் அண்மையில் அமுலுக்கு வந்த யுத்தநிறுத்தத்தில் அதிக பயன் எதுவும் கிடைக்கவில்லை என ஐ.நா சபை தெரிவித்துள்ளது. அப்பிரதேசத்தில் மிகக் குறைந்த நிவாரணப்பணியாளர்களே நிலை கொண்டுள்ளனர் எனவும் அவர் கூறினார். உதவி தேவைப்படுவோருக்கு சேவையாற்ற முடியவில்லை என ஐ.நா சபை மேலும் தெரிவித்துள்ளது. சூடானின் விடுதலை இயக்கம் கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து யுத்தநிறுத்தத்தை மேற்கொண்டு வருகின்றது

# மாநிலங்களில் வலுவிழக்கும் பொடோ சட்டம்?


ஜெயலலிதா

"பொடோ சட்டத்தில் திருத்தங்களும்,பொடோ மீளாய்வுக் குழுவிற்குக் கூடுதல் அதிகாரங்களும்" எனும் மத்திய அரசின் முடிவானது இந்திய அரசியலில் புதிய திருப்பங்களையும்,குழப்பங்களையும் ஏற்படுத்தியுள்ள போதும் நிச்சயமாக இது மாநிலங்களுக்கு ஒரு கடிவாளமாகும்.

அதேவேளை,மத்திய அரசும் இந்தத் திடீர் அறிவிப்பும் முடிவும் நிச்சயமாக மாநிலங்களுக்கு இனிப்பான விடயமாக இருக்கப் போவதில்லை. அதேநேரம் கசப்பு என்றாலும் முண்டி விழுங்கிவிடவும் அவை தயார் இல்லை.

கட்டாயமாகத் தமிழகம் மத்தியரசின் இந்தக் கடிவாளத்தில் கட்டுப்பட ஒரு போதும் தயாரில்லை என்பதை முதலமைச்சர் ஜெயலலிதாவின் காரசாரமான அறிக்கையே சான்று பகர்கின்றது.

மத்தியரசின் இந்த முடிவு மாநிலங்களில் எத்தகைய பிரதிபலிப்பைக் கொண்டுவரப் போகின்றது என்பதைவிட மத்தியரசின் இந்த


வை.கோ


பழநெடுமாறன்

முடிவில் நிச்சயம் ஏதோ சூட்சுமம் இருக்கின்றது என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

ஏனெனில் மாநிலங்களில் பொடோ சட்டம் மூலம் சிறைக்குள் தள்ளப்பட்டவர்கள் அனைவருமே ஆளும் கட்சியினர் தமக்கு எதிரானவர்கள் எனச் சுட்டும் அரசியல் பிரமுகர்கள் தான் அதிகம்.

அது மட்டுமன்றிப் பத்திரிகை ஆசிரியர்கள் உட்படப் பொது மக்கள் கூட பொடோவில் கைதுசெய்யப்பட்ட அநியாயமும் மாநிலங்களில் நடந்துள்ளது.

இதனால் பாரதீய ஜனதாக் கட்சியுடன் உறவான கட்சிகளும் விலகும் நிலையும் காணப்பட்டது. மறுபுறம் போராட்டங்களும் வலுப் பெறும் நிலைமைகள் உருவானது.


நக்கீரன் கோபால்

எனவே நெருங்கும் பாராளுமன்றத் தேர்தல், நெருங்கிவிட்ட மாநிலங்களுக்கான தேர்தல் என்பன காரணமாகப் பாரதீய ஜனதா தமது கட்சிக்கு வலுச் சேர்க்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து மாநிலங்களில் தலைவிரித்தாடும் பொடோவைத் தம்வசம் எடுப்பதோ அல்லது அதற்கான வழிமுறைகளைக் கையாள்வதன் மூலமே பொடோ அதிருப்தியாளர்களைத் திருப்தி அடைய வைக்க முடியும் என பாரதீய ஜனதா நம்புகின்றது.

அதன்படி பொடோவில் திருத்தங்களும்,பொடோ மறுவாய்வுக் குழுவிற்கு அதிக அதிகாரங்களும் வழங்கியதாகப் பறைசாற்றுகின்றது.

இந்த அறிவிப்புத் தமிழக முதலமைச்சர் உட்பட ஒரு சிலரைக் காயப்படுத்தினாலும் பொடோ மூலம் தாக்கப்பட்டவர்களுக்கு மருந்தாக மாறும் என பாரதீய ஜனதாவின் நம்பிக்கை வீண்போகவில்லை.

இந்த அறிவிப்பினால் தமிழகத்தில் மறு மலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகம் புத்தொளி பெற்றுள்ளது. தி.மு.க. அப்பாடா எனக் கொஞ்சம் பெருமூச்சு விடத் தொடங்கியுள்ளது. பத்திரிகையாளர்கள் விட்டது தொல்லையென ஆசுவாசப்படுகின்றனர்.

ஏனெனில், எதிர்காலத்தில் மாநில அரசுகள் பொடோ சட்டத்தில் ஒருவரைக் கைது செய்ய வேண்டுமெனில் பொடோ மறு ஆய்வுக்குழுவிற்குத் தகுந்த காரணங்களை முன்வைக்க வேண்டும். அதனை அக்குழு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அக்குழு மாநிலங்கள் முன்வைக்கும் காரணங்கள் போதாது என்றோ,அல்லது தகுந்தவை அல்ல என்றோ கூறும் பட்சத்தில் மாநிலம் குறிப்பிட்ட நபரைக் கைதுசெய்ய முடியாது. அதுவும் பொடோவில் தள்ளிவிடுவது இனி இயலாத காரியம்.

எனவே தற்போது தமிழகம், ஆந்திரா, டில்லி, குஜராத்,ஜம்முகாஷ்மீர், ஜார்க்கண்ட், மகுராஷ்டிரா,உத்தரப் பிரதேசம்,சிக்கிம் ஆகிய மாநிலங்களில் பொடோவில் கைதுசெய்யப்பட்ட அனைவரும் வெளிவருவது உறுதி என நம்பப்படுகின்றது.

ஏனெனில்,பொடோ என்பது எல்லை கடந்த தீவிரவாதத்தை ஒழிப்பதற்காகவே கொண்டு வரப்பட்ட சட்டமாகும். அந்த வகையில் பொடோவில் மாநிலங்களில் கைதுசெய்யப்பட்ட அனைவருமே அரசியல்வாதிகளும், பொது மக்களும், ஊடகவியலாளர்களும் தான்.

இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் பொடோவில் கைது செய்வதற்குத் தகுந்தவை அல்ல எனப் பொடோ மறுவாய்வுக்குழு விளக்கமளிக்குமானால் நீதிமன்றங்கள் இவர்களை விடுதலை செய்தே ஆக வேண்டும்.

இதில் முக்கியமானது மத்தியில் ஆட்சி செய்யும் தேசிய சனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள்தான் மாநிலங்களில் பொடோவைக் கையில் எடுத்துக் கொண்டு வலை வீசித் திரிகின்றன.

மாறாகக் காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் இந்தச் சிக்கல் இருக்கவில்லை. இதனால் பொடோவை அவை வலுவாக எதிர்த்தன.

ஆனால், ஆரம்ப காலங்களில் காங்கிரஸ் ஆட்சியின் போதே மிசா சட்டம் கொண்டுவரப்பட்டது. பின்னர் இந்திராகாந்தி ஆட்சியில்தான் தடா சட்டம் பிரபல்யமானது. மிசாவும்,தடாவும் அரசியல் எதிரிகளுக்கே வீசப்பட்டது.

அதனால்தான் பாரதீய ஜனதா மிசாவும், தடாவும் அரசியல் நோக்கில் பயன்படுத்தப் பட்டதாகக் கூறிக்கொண்டன. தாங்கள் தீவிரவாதிகளுக்கு மட்டுமே குறிவைப்பதாகப் பொடோ சட்டத்தை அமுல்ப்படுத்தின.

ஆனால் மத்திய அரசின் பொடோ சட்டத்திற்கு ஆதரவு வழங்கிய கட்சிகள் மீது மாநிலங்களில் ஆட்சியிலுள்ள ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தில் இடம்பெறாத மாநிலங்களில் பொடோவைத் திருப்பிவிட்டன இதுதான் பாரதீய ஜனதாவுக்குப் பேரதிர்ச்சி ஆகும்.

இந்த நிலைதான் தமிழகத்திலும் காணப்பட்டது. முதலமைச்சர் ஜெயலலிதா தனக்குப் போட்டியென நினைத்தவர்கள்,தன்னை விமர்சிபவர்கள்,தனக்குச் சாதகமாக இருக்காதவர்கள்.... எனக் குறிவைத்தவர்கள் அனைவரையும் பொடோவில் கைது செய்யத் துணிந்தார்.

அவர்களில் முக்கியமானவர்கள் ம.தி.மு.க., வைகோ உட்பட 9 பேர்,பழநெடுமாறன், பத்திரிகை ஆசிரியர், நக்கீரன் கோபால் போன்றோர் பொடோவில் கைதாகினர்.

மாநிலங்கள் தமது இஸ்ரத்திற்குப் பொடோவை வளைக்கின்றன என்பதைப் புரிந்துகொண்ட மத்திய அரசு ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் பொடோ மறு ஆய்வுக்குழுவைக் கொண்டு வந்தது.

ஆனால் பொடோ மறு ஆய்வுக் குழுவின் விசாரணைகளுக்குத் தமிழகம், ஜார்க்கண்ட், ஜம்முகாஷ்மீர் போன்ற மாநிலங்கள் பதிலளிக்க மறுத்துவிட்டன. தமிழக முதலமைச்சரோ ஒரு படி மேல்போய் நாடாளுமன்றத்தால் கொண்டுவரப் பட்ட சட்டம் பொடோ சட்டம். இதனை ஆய்வு செய்யவும்,அதன்படி மாநில அரசுகளைக் கேள்வி கேட்கும் உரிமை பொடோ மறு ஆய்வுக்குழுவிற்கு இருக்கின்றதா என வினா எழுப்பினார். பொடோ ஆய்வுக்குழுவிற்குத் தகுந்த பதிலளிக்கவும் மறுத்துவிட்டார்.

இதற்குத் தகுந்தாற்போல் மாநில அரசு விடயங்களில் மத்தியரசு தலையிட முடியாது எனத் துணைப் பிரதமர் அத்வானி முன்மொழிந்தார். பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் வெங்கையா நாயுடுவோ பொடோ சட்டம் மீளப் பெறப்படாது என வழிமொழிந்தார். இவை அனைத்தும் மாநிலங்களுக்கு வலுச் சேர்த்தன.

ஆனால், தி.மு.க, ம.தி.மு.க என்பன பொடோவை மீளப் பெறுதல் வேண்டும் என்று வலியுறுத்தின. தி.மு.க இன்னும் வலுவாக டிசம்பர் முதலாம் திகதி பொடோவை எதிர்த்துச் சிறை நிரப்புப் போராட்டம் நடத்தப் போவதாக எச்சரித்தது. எனவே இவை அனைத்தும் மத்தியரசுக்கு விடுக்கப்பட்ட சவால்களாக அமைந்தன. தி.மு.க., தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து வெளியேறவும் தயாராகிவிட்டதாகவும் மத்தியரசு அச்சப் பட்டிருக்கக் கூடும்.

மத்தியில் ஆட்சி அமைக்க தி.மு.கவின் கூட்டுக் கட்டாயம் தேவை. தி.மு.க.வும், ம.தி.மு.க.வும் தற்போது நெருங்கிவிட்டதாகவே ஓரளவு நிலைமைகள் உள்ளன.

இதனால்தான் பாரதீய ஜனதாக் கட்சி அ.தி.மு.க சேராதுவிட்டாலும் துயரில்லை. தி.மு.க, ம.தி.மு.க வை தன்பக்கம் இழுத்துவிட முனைகின்றது.

இதனால் தான் கருணாநிதியையும், வைகோவையும் திருப்திப்படுத்த பொடோ மறு ஆய்வுக்குழுவுக்கு அதிக அதிகாரங்களை வழங்கியுள்ளது என்றே கூறமுடியும்.

இதனால் அதிகம் கொதித்துப் போயிருப்பவர் தமிழக முதலமைச்சர்தான். தீவிரவாதம் தலைதூக்கவே மத்தியரசு இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் கூறுகிறார்.

உண்மையில் தமிழக முதலமைச்சர் தீவிரவாதம் என்பதும் தீவிரவாதிகள் என்பதும் தனது அரசியல் எதிரிகளைத்தானா என்பது கேள்விக்குரிய ஒன்று.

ஆனால் ம.தி.மு.கவும், தி.மு.கவும் பொடோ மறு ஆய்வுக் குழுவுக்கான அதிக அதிகாரம் என்பதை ஏற்றுக் கொள்கின்ற போதும், பொடோ சட்டம் மீளப்பெற வேண்டும் என்றே அவை தற்போது வலியுறுத்தி வருகின்றன.

அதே நேரம் ம.தி.மு.க. தமது பொதுச் செயலர் வை.கோ வெளிவந்து விடுவார் என சோம்பல் முறித்து, களைகட்ட ஆரம்பித்துள்ளது. கட்சியின் தலைவர் எல்-கணேசன், பிரதமர் வாஜ்பாய், துணைப்பிரதமர் அத்வானி ஆகியோரைச் சந்தித்து ம.தி.மு.க. பொடோ சட்டத்தை எதிர்க்கவில்லை. பொடோ மூலம் பேச்சுரிமை, கருத்துரிமை பறிக்கப்படுவதையே எதிர்க்கின்றோம் என்று கூறியுள்ளார்.


இதனையடுத்து, அயோத்தி விவகாரத்தில் என்மீது சி.பி.ஐ. வழக்குப் போட்டது. அப்போது எனக்கிருந்த மன உளைச்சல் எனக்கு மட்டுமே புரியும். வை.கோ எவ்வளவு மனப் புழுக்கத்தில் இருப்பார் என்பது நன்றாகவே புரிகின்றது என்று நெகிழ்வு காட்டியுள்ளார் அத்வானி,

அத்துடன் மிகச்சிறந்த நாடாளுமன்றப் பேச்சாளரான வை.கோ, பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னரே வெளியே வந்தால் தான் பாரதீய ஜனதாவுக்கும் பலம் கூடும் என்று கூறியுள்ளார்.

ஆக---மத்தியரசின் எந்தவொரு நடவடிக்கையும் தனது தேர்தல் வியூகமே என்பது நன்றாகப்புரியக் கூடிய ஒன்றாகும்.

அதே நேரம் சிறையில் இருக்கும் வை.கோவோ சோதனையில் தோள் கொடுப்பவர்கள் யார்— ஓடிப் பதுங்குபவர்கள் யார்---, தலைமையில்லாத நேரத்தில் வாரிச்சுருட்டுபவர்கள் யார்----, என சிறையில் பாடம் படித்துள்ளதாகக் கூறுகின்றார்.இதன் மூலம் யாருக்குப் பாடம் புகட்ட விரும்புகிறார்? மத்திய அரசிற்கா?, காங்கிரஸ் அரசிற்கா?, தனது கட்சியிலுள்ள சிலருக்கா?

ஏனெனில் ம.தி.மு.க. தேசிய ஜன நாயக் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றது. அக்கட்சியின் செயலாளரை கைது செய்த போது மத்திய அரசு ஜீரணிக்க முடியாத போதும் அதை இவ்வளவு காலமும் பார்த்துக்கொண்டுதான் இருந்தது?


வாஜ்பாய்

அடுத்து காங்கிரஸ் கட்சி நக்கீரன் கோபால் கைது செய்யப்பட்ட போது காட்டிய எதிர்ப்பில் பாதிப் பங்கு கூட வைகோ கைதான போது காட்டவில்லை. ஏன் எனும் வினாவுக்கு புலிகளுக்கு ஆதரவாகப் பேசியமை என்பது காங்கிரசிற்கும் பிடிக்காத ஒரு விடயம் என்று சுட்டப்படுகின்றது.

அதே நேரம் தி.மு.க.கருணாநிதி, வை.கோவுடன் முரண்பட்டு நின்றார். ஆனால் வை.கோ கைதான போது சிறைக்குச் சென்றுபார்த்து ஆறுதல் கூறி இருக்கிறார்.மத்தியமைச்சர் கண்ணப்பன் கைது செய்யப்பட இருந்தமையை வன்மையாக எதிர்த்தார். மத்தியரசின் கையாலாகாத்தனம்


கருணாநிதி

இது எனச் சாடியிருந்தார்.

'யாரோடு யாருக்கு உறவு என்பதை அரசியலில் அவ்வப்போது சில பிரச்சினைகள் தான் முடிவு செய்யும்' இதனைத் தான் தற்போது தமிழகம் படம் பிடித்துக் காட்டத் தொடங்கியுள்ளது. அந்த வகையில் எதிர்காலத் தேர்தலில் தி.மு.கவுடனான ம.தி.மு.கவின் கூட்டணி, காங்கிரஸ் பக்கமா-- பாரதீய ஜனதாக் கட்சிப் பக்கமா என்பதை வைகோவின் விடுதலைதான் நிர்ணையிக்கப் போகின்றது.

அதேவேளை அ.தி.மு.க.மத்தியரசின் மீது பொடோ மறு ஆய்வுக் குழவிற்கு அதிக அதிகாரங்களை கொடுத்தமையினால் அதிகமான கோபத்திலுள்ளது.

அ.தி.மு.க. காங்கிரஸ்சுடன் ஒட்டுமா..? அல்லது தனித்து நின்று கூட்டணிக்கு முயற்சிக்குமா? என்பன விடைதேடும் விைாக்களாக இருக்கின்றன.

அதேவேளை, இவையனைத்திற்கும் முன்பு, பொடோவில் சிறையிலுள்ளவர்கள் வெளிவருவது பொடோ மறு ஆய்வுக்குழுவின் நடவடிக்கைகளில் தான் இருக்கின்றது. அதற்கு மத்தியரசு 'கைது செய்யப்பட்டவர்களின் கைதுக்கான காரணங்கள் ஏற்கக் கூடியதல்ல' என்று விளக்கம் கொடுக்க வேண்டும். இதன் மூலம் மத்தியரசு மாநிலங்களுக்கு கடிவாளமிடுமா? பொடோவின் கீழ் சிறையிலுள்ளவர்கள் திரும்புவார்களா? இது தான் தமிழகத்தில் இன்று ஓங்கி ஒலிக்கும் வினாவாகும்.

**அ.கலைவாணி**

# சனாதிபதி சந்திரிகாவின் தொடர் அதிரடியால்

# சிறிலங்கா அரசியல் களத்தில் குழப்பம்

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தைப்பயன்படுத்தி அரசியல் களத்தில் பல அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

சிறிலங்கா அரசியல யாப்பின் 70ஆவது சரத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தையே சனாதிபதி இந்த நடவடிக்கைக்கு துரும்பாக பயன்படுத்தியுள்ளார்.

இதன்படி மூன்று அமைச்சர்களை பதவி நீக்கியுள்ளதோடு நான்கு அரசாங்க நிறுவனங்களின் தலைவர்களையும் பதவி நீக்கியுள்ளார். இதன் தொடர்நடவடிக்கையாக நாட்டில் அவசரகாலச்சட்டத்தையும் பிரகடனப்படுத்தியுள்ளார்.

ஏற்கனவே சனாதிபதியும் அவரது சகோதரரான அநுரா பண்டாரநாயக்கவும் இது பற்றி தம்பட்டம் அடித்தே வந்தனர். ஆதலால் இது அரசியல் களத்தில் எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். இருப்பினும் இதன் விளைவுகள் எவ்வாறான பரிமாணங்களைத் தொடும் என்பது ஆராயப்பட வேண்டியது.

சனாதிபதியின் இந்த அரசியல் அதிரடியால் தெற்கு அரசியல் களம் குழம்பியுள்ளது. இது பாரிய நெருக்கடிகளையும் தோற்றுவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க, ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர்மாக்கார் ஆகியோர் சனாதிபதியால் துறையை தன்வசப்படுத்தியுள்ளார்.

ரூபவாகினி கூட்டுத்தாபனம், ஐ.ரி.என். தொலைக்காட்சி நிலையம், லேக்ஹவுஸ் நிறுவனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், அரசாங்க அச்சகக்கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் தலைவர்களை பதவி நீக்கிய சனாதிபதி சந்திரிகா தமது கட்சியிலுள்ளவர்களைக் கொண்டு அப் பதவிகளை நிரப்பியுள்ளார். இந்தவகையில் ரூபவாகினி கூட்டுத்தாபனத்திற்கு சனாதிபதியின் ஊடகப்பேச்சாளரான கரீம் பீரிசும், ஐ.ரி.என். தொலைக்காட்சி நிறுவனத்திற்கு நியூட்டன் குணசேகரவும், லேக்ஹவுஸ் நிறுவனத்திற்கு கேசரலால்குணசேகரவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு கட்சன் சமரசிங்கவும், அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்திற்கும் பொ.ஐ முன்னணி முக்கியஸ்தர்களில் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சனாதிபதி தனது அதிரடி நடவடிக்கைகளை திறம்பட தொடர்ந்து நடத்துவதற்கும் மக்கள் மத்தியில் தனது நடவடிக்கைகளை நியாயப்படுத்தவும் சனாதிபதி இந்த அரச ஊடகங்களை கைப்பற்றியுள்ளார்.

அத்துடன் அவர் நின்றுவிடாது தனது இந்த தொடர் அதிரடி நடவடிக்கைகளுக்கு சட்ட அங்கீகாரத்தைத் தேடும் வகையிலும் ஐக்கிய தேசிய முன்னணியினரின் எதிர்நடவடிக்கைகளை முறியடிக்கும் நோக்கோடும் அவசர காலச்சட்டத்தையும் தனது நிறைவேற்று அதிகாரத்தைப்பயன்படுத்தி பிறப்பித்துள்ளார். இதன்மூலம் ஆயுதப்படையினருக்கும் பொலிசாருக்கும் கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தனது அதிகார இலக்கை அடைகளில் ஊடகத்துறை அமைச்சு பிழையான வழிகளில் சென்றுவிடலாம் அதாவது இருக்கும் தற்போதைய நிலைமைகளைப் பொறுத்து ஊடகத்துறை பிழையான வழியில் சென்றுவிடலாம் எனும் அச்சம் காரணமாக அதனையும் சனாதிபதி பொறுப்பெடுத்துக் கொண்டார்"என சனாதிபதியின் ஆலோசகரும் பாராளுமன்ற உறுப்பினரும் பொது சன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்தவருமான லக்ஷ்மன் கதிர்காமர் சனாதிபதியின் அதிரடிக்குக் காரணம் கற்பித் துள்ளார். இருந்தாலும் அரசாங்க ஊடகங் களின் தலைவர்கள் பதவி நீக்கப்பட்டதற்கு இவர் காரணங்களை வெளிப்படுத்தவில்லை.

சனாதிபதியின் அதிரடிகளுக்கு காரணங்கள் தேடப்பட்டு வலிந்து காரணம் கற்பிக்கப்பட்டிருக்கிறது. பாதுகாப்பு அமைச்சை சனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி பொறுப்பேற்க முற்படக் கூடாது. இது சமாதான முயற்சிகளில் சிக்கலை ஏற்படுத்தும் என மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகள் சனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்திருந்த போதும் அதைப் பொருட்படுத்தாது சனாதிபதி அதிரடியில் இறங்கியுள்ளார்.

சிறிலங்காவில் மல்வத்த மற்றும் அஸ்கிரிய பீடங்கள் மிகவும் பலமான அரசியல் செல்வாக்கைக் கொண்டுள்ள பீடங்களாகும். இப் பீடாதிபதிகளின் வேண்டுகோள்களையும் மீறி சனாதிபதி அரசியல் அதிரடியை மேற்கொண்டமையானதும் நாட்டில் நிலவும் சமாதானச் சூழ்நிலையிலும் நெருக்கடிகளை

படுத்திய அவரச காலச் சட்டத்திற்கு பத்து நாள் ஆயுளே தற்போது உண்டு. அந்த பத்து நாட்களுக்குள் பாராளுமன்றத்தினால் இவ் அவசர காலச் சட்டம் அங்கீகரிக்கப்பட வேண்டும். இல்லையேல் இது வலிதற்றதாகிவிடும். அடுத்ததாக பாராளுமன்றத்தை சனாதிபதி 15 நாட்களுக்கு அதாவது 3ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளார். இதன்படி 19ஆம் திகதி பாராளுமன்றம் கூட்டப்பட வேண்டும். மீண்டும் ஒத்திவைப்பதாயின் ஒருமாதம் ஒத்திவைக்க முடியும். அதற்கு பாராளுமன்றத்தில் அதாவது, 225 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் 113 பேரின் ஆதரவு தேவை. இல்லையேல் ஒத்தி





பதவிநீக்கம் செய்யப்பட்டு இவ் அமைச்சுப் பொறுப்புக்களை சனாதிபதி தம்வசம் வைத்துள்ளார். அத்துடன் பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சுக்களின் செயலாளர்களும் சனாதிபதியால் பதவி நீக்கப்பட்டு புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக சிறில் கேரத்தும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளராக திலக்ரணராஜாவும் சனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள அதே வேளை உள்துறை அமைச்சின் செயலாளர் யுனைட் தொடர்ந்தும் பதவியில் இருக்கிறார். இம் மூன்று அமைச்சர்களும் வகித்துவந்த ஏனைய இலாகாக்கள் இவர்களிடம் தொடர்ந்து இருக்குமென்றும் இதற்காக இவர்கள் சனாதிபதியிடம் மீண்டும் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சனாதிபதி செயலகம் அறிவித்திருந்தது. பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிடம் போக்குவரத்துத்துறையும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவிடம் கிறிஸ்தவமத விவகார இலாகாவும், ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர்மாக்காரிடம் தபால் தொலைத்தொடர்பு இலாகாவும் தொடர்ந்து தக்கவைக்கப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்தால் போல் சனாதிபதியின அதிரடி நடவடிக்கையாக அரசாங்க ஊடகத் யப்பெற தேவையான வன் முறைகளை பிரயோகிப்பதற்கும் சனாதிபதி சந்திரிகா தயாராகிவிட்டார் என்றே தோன்றுகிறது. இதற்கான சட்ட அங்கீகாரமே அவசர காலச்சட்ட பிரகடனமாகும்.

ஆயுதப்படையினரும் பொலிசாரும் எனக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று சனாதிபதி சந்திரிகா கோரியுள்ளதும் இந்த வகையில் அமைந்ததே "இந்த மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்க சனாதிபதி முடிவு எடுத்தமை நாட்டின் பாதுகாப்பு நோக்கம் கருதியே

திருகோணமலையின் பாதுகாப்பு விடயம்-விடுதலைப்புலிகளின் ஆயுதக் கப்பல் தப்பிச் சென்ற விடயம் என்பனவற்றினால் பாதுகாப்பு அமைச்சை சனாதிபதி பொறுப்பேற்கும் நிலை ஏற்பட்டது.

அதே போல் நாட்டின் உள்துறையில் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு சனாதிபதி கேட்டிருந்த போதும் நடவடிக்கைகளை ஜோன் அமரதுங்க எடுக்காததால் அந்த அமைச்சையும் சனாதிபதி பொறுப்பேற்றுக் கொண்டார். ஊடகத்துறை அமைச்சைப் பொறுப்பேற்றதற்கான உரிய காரணங்கள் எதுவும் இல்லை என்றாலும் சில விடயங்யும் சிக்கல்களையும் தோற்றுவிக்கக் கூடியது என்று தெரிந்தும் சனாதிபதி இவ்வாறான நடவடிக்கையை மேற்கொண்டமையானது அவர் பதவி ஆசையில் எத்துணை பிரியமாக இருக்கிறார் என்பதையே காட்டுகிறது.

தனது இந்த அதிரடி அரசியல் நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் குறிப்பாக மேற்குலகு விரும்பமாட்டாது என்றும் சனாதிபதிக்குத் தெரிந்திருந்ததாலோ என்னவோ அவர் உடனடியாகக் கொழும்பிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளைச் சந்தித்து தனது நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் வகையில் கருத்துக்களை முன்வைத்தள்ளார். அதுமட்டுமல்ல தனது அதிரடி நடவடிக்கைகளுக்கு வெளிநாடுகளிடமிருந்து கிடைக்கக் கூடிய எதிர்ப்பலைகளைத் தணிக்கும் விதமாக "நான்

**கெல்மன்**

யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்து அமுல் செய்யப்போகிறேன்.இனப்பிரச்சினையை விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடாத்தி தீர்க்கத் தயாராக இருக்கிறேன்." என்ற அஸ்திரத்தையும் ஏவிவிட்டுள்ளார்.

சனாதிபதி சந்திரிகாவிற்கு இவற்றைச் செய்வதற்கு நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் அதிகாரம் இருந்தாலும் தற்போதைய சூழலில் இது அரசியல் சாணக்கியமற்ற செயல் என்றே கொள்ளவேண்டும்.

சனாதிபதியின் அதிகார ஆசை நாட்டு மக்களைப் பாரிய நெருக்கடிக்கும் கலகத்திறகும், ஆபத்திற்குள்ளும் தள்ளிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இது குறித்து சர்வதேச சமூகத்தினரும் சிறிலங்கா பிரதமர் உள்ளிட்ட ஆட்சியாளரும் எச்சரிக்கைகளையும் விடுத்துள்ளனர்.

அது மட்டுமல்ல, சனாதிபதியின் அதிரடி நடவடிக்கையின் தொடரில் அடுத்தது என்ன? என்ற கேள்வியும் பரவலாக எழுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திலுள்ள பலமான எதிரிகளை கைது செய்து அரசாங்கத்தை சனாதிபதி தனது பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரக்கூடும் என்றும் ஐ.தே.கட்சி வட்டாரங்களில் தகவல்கள் கசிந்தன. இருப்பினும் சனாதிபதி பிரகடனப் வைப்பதும் சாத்தியமாகாது. இந்நிலையில் பாராளுமன்றம் நிச்சயம் கூட்டியே ஆக வேண்டிய சூழல் இருக்கிறது. இதில் சனாதிபதி பெரும்பான்மை ஆதரவைப் பெறத்தவறின் அவரது திட்டங்கள் தவிடு பொடி ஆவது மட்டுமல்ல அவரது இருப்பிற்கே ஆபத்து வந்துவிடும்.

பாராளுமன்றத்தில் 128 உறுப்பினர்களின் ஆதரவு தமக்கு இருப்பதாக உறுதிப்படுத்திய பத்திரம் ஒன்றை சபாநாயகரிடம் பிரதமர் சார்பாக அமைச்சர் கருஜெயசூரிய சமர்ப்பித்துள்ளார்.

ஏற்கனவே, ஐ.தே. கட்சியிடம் 98 ஆசனங்கள் இருக்கின்றன. இவர்களுடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ரவூப் ஹக்கீம் அணியினர் ஆறு பேரும், அதாவுல்ல அணியினர் மூவரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மூவரும், மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த இருவரும் சுயேச்சைக்குழுவைச் சேர்ந்த ஒருவரும் மேலும் தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் 15 பேரும் ஐ.தே. முன்னணி அரசிற்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளனர். இந்நிலைப்பாடு தொடர்ந்தும் இறுக்கமாக இருக்குமாயின் சனாதிபதிக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைகூட கொண்டு வரப்பட்டு சனாதிபதிக்கெதிரான நடவடிக்கையை ஐக்கிய தேசிய முன்னணி அரசு முடுக்கி விடலாம்.

சனாதிபதிக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை உயர் நீதிமன்றின் அனுமதியைப் பெறவேண்டும். இதன் ஒரு முன்னோடி நடவடிக்கையாகவே சனாதிபதி சந்திரிகாவால் நியமிக்கப்பட்ட உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் சரத் என்.டி. சில்வாவுக் கெதிரான குற்றவியல் பிரேரணையாகும். இதை பாராளுமன்றில் நிறைவேற்றி அவரை பதவியிலிருந்து நீக்கி புதிய நீதியரசரை நியமித்ததும் சனாதிபதிக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரமுடியும் ஆகவே எதற்கும் அடிப்படையானது பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவே ஐ.தே. முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதாக வாக்குறுதி அளித்த பாராளுமன்ற உறுப்பினர்கள்விலை போகாவிட்டால் சனாதிபதியின் எதிர்காலம் கேள்விக்குள்ளாவதைத் தவிர்க்க முடியாது போகும். இது தான் நிலை என்றால் சனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக் கக் கூடும். பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் மீண்டும் தேர்தல். தேர்தலிற்குப் பின்னர் எந்தக் கதிரையில் யார் இருப்பார்கள் என் பதை பொறுத்திருந்து பார்ப்போம். □

# சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்துள்ள சமாதான முயற்சிகள் தொடர பிரிட்டன் ஆதரவு!

## -அரசியல் நெருக்கடிகளையிட்டும் கவலை

**இலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடி குறித்து மீண்டும் தனது கவலையை வெளிப்படுத்தியிருக்கும் பிரிட்டிஷ் அரசாங்கம் சனாதிபதி அவசரகால நிலையை பிரகடனப்படுத்தியமையும் பாராளுமன்ற கூட்டத் தொடரை ஒத்திவைத்தமையும் சமாதான பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பிக்கப்படுவது குறித்த அச்சத்தை தோற்றுவித்திருப்பதாகத் தெரிவிக்கின்றது.**

அமைச்சர் மிலிந்த மொறகொட பிரிட்டனின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மைக் ஓ பிறையனை நேற்று முன்தினம் சந்தித்த போது பிரிட்டனின் இந்தக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், சர்வதேச சமூகத்தின் ஆதரவை வென்றுள்ள ரணில் விக்கிரம சிங்கவின் சமாதான முயற்சிக்கான பிரிட்டனின் ஆதரவு மீள வலியுறுத்தப்பட்டதாகவும் பிரிட்டனின் வெளிநாட்டு மற்றும் பொது நலவாய அலுவலகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும், சமாதான முயற்சியின் மீதான பற்றுறுதியின் நிமித்தமும், வெளிப்படைத் தன்மையான செயற்பாடுகளின் பிரகாரமும் சனாதிபதிக்கும் அரசாங்கத்திற்குமிடையிலான நெருக்கடி முடிவுக்குக் கொண்டு வரப்படும் என்றும் நம்புவதாகவும் மைக் ஓ பிறையன் மிலிந்த மொறகொடவுக்கு கூறியுள்ளார்.

# நெதர்லாந்து உதவி

வடக்கு-கிழக்கின் மக்கள் அபிவிருத்தித் திட்டங்களுக்காக நெதர்லாந்து அரசாங்கம் நிதியுதவி வழங்கியுள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில் நேற்று முன்தினம் கொழும்பில் நிதி அமைச்சின் செயலர் சரித்த ரத்வத்த மற்றும் நெதர்லாந்து தூதுவர் சூரன் பிளன்கட் ஆகியோர் கையெழுத்திட்டனர். (32)

# சனாதிபதி மீது குற்றப் பிரேரணை ஐ.தே.மு.அரசாங்கம் முடிவு

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பாராளுமன்றத்தில் குற்றப்பிரேரணை கொண்டுவரத் தீர்மானித்துள்ளதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. சனாதிபதியின் அரசியல் செயற்பாட்டால் ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோபம் அடைந்துள்ளதாகவும் சனாதிபதியை அகற்றத் தீர்மானித்துள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறியிருக்கிறார்.

எவ்வாறாயினும் சனாதிபதிக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்கப் பிரதமமந்திரி மறுத்துள்ளதாகவும் அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்களை அமைதியாக இருக்கும்படி கேட்டுள்ளதாகவும் இன்னொரு தகவல் கூறுகின்றது. அரசியல் குழப்ப நிலை பற்றி நாங்களும் கூட ஆலோசனை நடாத்தியுள்ளோம் என ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் கூறினார்.

# புலிகளுடனான சமாதான முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுக்க சீனா வலியுறுத்து

இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடிக்கு சுமுகமான முறையில் தீர்வு கண்டு அரசின் ஸ்திரத் தன்மையையும் நாட்டின் அமைதியையும் பாதுகாப்பதன் மூலம் விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று சீன வெளிவிவகார அமைச்சுக் கூறியுள்ளது.

இலங்கையின் புதிய அரசியல் நெருக்கடி குறித்து முதல் தடவையாக கடந்த 6 ஆம் திகதி கருத்து வெளியிட்ட சீன வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் ஷாங்கியூ இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையின் அரசியல் நெருக்கடி சுமுகமான முறையில் தீர்க்கப்பட்டு அரசின் ஸ்திரத்தன்மையும் நாட்டின் அமைதியும் பாதுகாக்கப்பட வேண்டும். இதன் மூலம் இலங்கையின் சமாதான முயற்சிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படும் என்றும் சீனா நம்புகின்றது.

சீனா இலங்கையின் நீண்டகால நட்பு நாடாகும். இலங்கையின் இன்ப துன்பங்களிலும் பங்கு கொள்ளும் நாடாகும்.

அந்த வகையில் அரசியல் நெருக்கடிகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டு சமாதான முயற்சிகள் வெற்றி பெற்று நாட்டின் பொருளாதாரம் வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்று நாம் வாழ்த்துகின்றோம். மக்கள் நலனைக் கருத்திற் கொண்டு செயற்படுவதே ஒவ்வொரு அரசாங்கத்தினதும் கடமையுமாகும் என்றார்.

# அளவெட்டியில் விவசாயக் காணியில் பெருமளவு வெடிபொருட்கள் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி இறால் மடப் பகுதி விவசாயக் காணி ஒன்றினுள்ளிருந்து பெருமளவு ஆயுதத்தளபாடங்கள் மீட்கப்பட்டதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடை பெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது: மேற்படி விவசாய நிலப் பரப்பில் அதன் உரிமையாளர் பண்படுத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை இவ்வாயுதத் தளபாடங்கள் புதைக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இது தொடர்பாக அப்பகுதி படையினரிடம் அவர்களால் தகவல் கொடுத்ததைத் தொடர்ந்து அங்கு விரைந்த படையினர் அவற்றை மீட்டுச் சென்றுள்ளனர்.

பின் அங்கு வந்து குவிந்த ஏராளமான படையினர் அப்பகுதியெங்கும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாலேயே இப்பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (33)

# நாட்டின் பாதுகாப்புப் பொறுப்பு சனாதிபதிக்கே வழங்கப்பட்டுள்ளது

## பிரதிப்பொலிஸ்மா அதிபர்கள் மத்தியில் சந்திரிகா உரை

அரசியல் யாப்பின்படி சனாதிபதிக்கே ஒட்டுமொத்த பாதுகாப்புப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது என சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க தெரிவித்தார். கடந்த வியாழனன்று சனாதிபதி மாளிகையில் இடம் பெற்ற பிரதிப்பொலிஸ்மா அதிபர்களுக்கான கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் பேணும் பொறுப்பு பொலிசாரைச் சார்ந்தது.

ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும் இடங்களுக்கு துப்பாக்கிகளை எடுத்துச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அத்துடன் அமைதியான முறையில் நடைபெறும் எந்தவொரு ஆர்ப்பாட்டத்தையும் நான் நிறுத்தப்போவதில்லை என்று தெரிவித்தார்.

பிரதமரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்திற்கு ஆகக்கூடிய பாதுகாப்பை அளிக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபருக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

அரசியல் யாப்பின்படி சனாதிபதிக்கு ஒட்டுமொத்தபாதுகாப்பு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. பிரதமர் அரசாங்க பொறுப்பை ஏற்றுக் கொண்டபோது பாதுகாப்புத் துறையை நான் வைத்திருப்பதற்கு இணக்கம் தெரிவித்தபோதிலும் நல்லெண்ணத்துடன் பாதுகாப்பு அமைச்சர் பதவியை நான் அரசாங்கத்திற்கு வழங்கினேன். கட்சி ஆதரவாளர்களுக்கும், ஏனைய மக்களுக்கும் ஏற்படுத்தப் பட்டஅநீதிகளுக்கு எதிராக இவ் அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுக்க இயலாமற் போயுள்ளது.

நாட்டில் பாதுகாப்பு நிலை மிக மோசமாகச் சீர்குலைந்துள்ளது. அரசினால் இந்நிலைமைக்கு பரிகாரம் காணமுடியவில்லை. சில அரசியல்வாதிகளுக்கு பாதாள கோஷ்டியினரின் ஆதரவு இருக்கிறது. நாட்டில் சட்டமும், ஒழுங்கும் மிகவும் மோசமான நிலையை எதிர் நோக்குகிறது என மேலும் அவர் கூறினார்.

இக் கூட்டத்தில் பதில் பொலிஸ்மா அதிபர் இந்திராடி சில்வா உட்பட 32 பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது.

# தையல் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கக் கோரல்

துணுக்காய்ப் பிரதேசதிற்குட்பட்ட மகளிருக்கான தையல் டிப்ளோமா பயிற்சி நெறி 01.01.2004இல் புதிதாக ஆரம்பிக்கப் படவுள்ளது. அதில பயிற்சிபெற விருபபம் உடையவர்கள் துணுக்காய் பிரதேச செயலர் பணிமனையிலுள்ள விண்ணப்பத்தை பூர்த்தி செய்து 10.11.2003திகதிக்கு முன் பணிமனையில் ஒப்படைக்குமாறும் பயிலுனர் அனைவரும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளித்து அதில் தகுதியுடையவராகக் காணப்படும் பட்சத்திலே இப்பயிற்சி நெறியில் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள். என்றும் துணுக்காய்ப் பிரதேச செயலாளர் சி.ரத்தினம் கேட்டுக்கொள்கின்றார். (24)

# சமாதான முயற்சிகளின் அடுத்த நிலைபற்றி ஆராய நோர்வே அனுசரணையாளர் வருகை

## -நோர்வே தூதரக வட்டாரங்கள் அறிவிப்பு

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல் கேசன் மற்றும் விசேட தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் ஆகியோர் திட்டமிட்டபடி எதிர்வரும் 11ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இலங்கை வரவுள்ளதாக நோர்வே தூதரக வட்டாரங்கள் கூறியுள்ளன.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பான தங்கள் யோசனைகளைப் புலிகள் அரசிடம் சமர்பித்த நிலையில் அடுத்த நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்காக இவ்விருவரும் இங்கு வருகின்றனர்.

கொழும்பில் இவர்கள் பிரதமர் சனாதிபதி மற்றும் முக்கிய அமைச்சர்களையும் எதிர்க்கட்சி முக்கியஸ்தர்களையும் சந்திப்புதுடன வன்னிக்கு வந்து விடுதலைப் புலிகளையும் சந்திப்பார்கள். சமாதன முயற்சி குறித்து உறுதியாக எதையும் கூறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் கூறியுள்ளார்.

இந்த நிலையில் நோர்வே அனுசரணையாளர்களின் இலங்கை வருகை சமாதான முயற்சிகளில் எந்தளவு மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்றது. என்ற கேள்வியும் எழுந்துள்ளது.


**M.A, M. Com.**

**(காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை)**

★ மேற்குறிப்பிடப்பட்ட பட்டநெறிக்கு பல்கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

★ இப்பட்டநெறிக்கு பட்டதாரிகள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

★ பதிவுகள் 01.11.2003இல் இருந்து ஏற்கப்படுகின்றன. இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பம். 03-12-2003

★ பதிவுகள் நேர அட்டவணைகள் தொடர்பான சகல விபரங்களையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்.

விபரங்களுக்கு :-
யாழ்.இணைப்பாளர்
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(3853)



**சேரன் வாணிபம்**

**பணிநிலை வெற்றிடம்**

**01. பணிநிலை** :- எழுதுநர் பயிலுநர் [ஆண்]

**தகைமைகள்**:- தமிழ்,கணிதம், வர்த்தகம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன்,ஆறுபாடங்களில் சித்தி அடைந்திருத்தல்வேண்டும்.

**அகவை** :- 20 - 30 அகவை உடையவராக இருத்தல் வேண்டும்.

**கொடுப்பனவு** :- பயிற்சிக்காலத்தில்ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா2,000/=வழங்கப்படும்.

**பயிற்சிக்காலம்** :- மூன்று மாதங்கள்

**02. பணிநிலை** :- வெதுப்பக உற்பத்தியாளர் பயிலுநர் [ஆண்]

- புதிய தொழில்நுட்பப் பொறித்தொகுதிகளில் பயிற்சிகள் வழங்கப்படும்.

**தகைமைகள்**:- தமிழ்,விஞ்ஞானம், கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தி அடைந்திருத்தல்வேண்டும்.

**அகவை** :- 20 - 30 அகவை உடையவராக இருத்தல்வேண்டும்.

**கொடுப்பனவு** :- பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா 2,000/= வழங்கப்படுவதுடன்,தங்குமிட வசதியும் ஒழுங்குசெய்யப்படும்.

**பயிற்சிக்காலம்** :- ஆறு மாதங்கள்.

வேண்டுகைகள் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட, தனி விளக்கங்கள் அடங்கிய படிவத்தில் பூர்த்தி செய்து 2003.11.12ஆம் நாள் புதன்கிழமைக்கு முன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு தபாலிலோ அல்லது பணிமனை பணிநேரத்தில்நேரிலோ அனுப்பி வைக்கப் படல்வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் எழுதுநர் வெதுப்பக உற்பத்தியாளர் பயிலுநர் பணிநிலைக்கான விண்ணப்பப் படிவம் என எழுதப்பட வேண்டும்.

ஆளுகை,
சேரன் வாணிபம்,
நடுவப்பணிமனை,
யாழ்.வீதி,கிளிநொச்சி.

(சி-8694)



## சிந்தனைக்கு

சமூக நீதி சரிவரப்பேணப்பட்டால் தான் சமுதாயம் ஒரு உன்னத நிலைக்கு வரும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 09-11-2003

## அரசியற் குழப்பங்கள்!

சிறிலங்காவில் ஏற்படும் அரசியல் மாற்றங்களை பருவ கால மாற்றங்களுடன் ஒப்பிட்டுப் பேசியிருந்தார் சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. பி.பி.ஸி ஒலிபரப்புச் சேவைக்குச் சனாதிபதியின் அமைச்சுப் பறிப்பு நடவடிக்கையின் பின் பேட்டியளித்திருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க "இது மாதிரி விடயங்கள் எல்லாம் இலங்கையில் வருடம் இரு தடவை நடைபெறும் விடயங்களே. வட-கிழக்கு பருவமழை போலவும், தென்மேற்குப் பருவமழை போலவும் என்றார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இக்கூற்றுக்கள் சிறிலங்கா அரசின் ஸ்திரமற்ற தன்மையை வெளிக்காட்டுவதாயுள்ளது என்பது வெளிப்படையானது. ஆனால் இதனைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே தனது பேச்சுக்களில் குறிப்பிட வேண்டிவந்தமை அவரது துரதிர்ஷ்டம் என்றே கூறலாம்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இக்கூற்றுக்கள் கடந்த காலத்தில் நிலவிய 'பகிடி' ஒன்றை ஞாபகப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. அதாவது லண்டனில் உள்ள புத்தகக்கடைக்குச் சென்ற இலங்கையர் ஒருவர் சிறிலங்காவின் அரசியல் யாப்பு ஒன்றைக் கோரினாராம். அதற்கு அங்கு, சஞ்சிகைகள் இங்கு விற்பனை செய்யப்படுவதில்லை எனப் பதிலளிக்கப்பட்டதாம்.

அன்று இது ஓரளவிற்குப் 'பகிடி' போன்றதொன்றாகவே பேசப்பட்டதாயினும் இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசியல் மாற்றத்தினை வருடாந்த பருவகால மாற்றங்களுடன் ஒப்பிடப் பேசியிருப்பதானது லண்டன் வியாபார நிலையத்தின் பதிலை உறுதி செய்வதாகவே உள்ளது. ஏனெனில் உலகில் சில சஞ்சிகைகள் வருடாந்த சஞ்சிகைகளாகவும் சில வருடத்திற்கு இரண்டு என்றும் சில வருடத்திற்கு நான்கு எனவும் வெளிவருவது அனைவரும் அறிந்ததே.

ஆனால் பிரதமரின் பதில் இத்தகையதொன்றாக இருப்பினும், சனாதிபதியின் நடவடிக்கைகள் முற்றிலும் இதனை ஒத்ததாக இல்லை. ஏனெனில் அவரது எதிர்நடவடிக்கைகள் பொதுவானதாக இருப்பினும்காலக்கிரமத்தின் படி சீரானதாக இல்லை. மாறாக இலங்கையின் வானிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் அரசியற் குழப்பங்கள் -குறிப்பாக அமுக்க இறுக்கங்கள் போன்றவையாகவே உள்ளது. அதாவது எதிர்பாராத வேளையில் தோன்றி பாதகமான விளைவுகளைக்கொடுத்துவிட்டு மறைந்து விடும் அயனக் குழப்பங்கள் போன்றுள்ளது.

அதாவது ஐ.தே.முன்னணி அரசாங்கத்தின் மூன்று அமைச்சுக்களைப் பறித்தெடுத்த சனாதிபதி சந்திரிகாவின் அடுத்த நாள் நடவடிக்கையாக அவசரகாலச் சட்டப் பிரகடனம் இருந்தது. இவ் அவசரகாலச்சட்ட அறிவிப்பானது அவர்களைக் கைதுசெய்தல், தடுத்து வைத்தல் போன்ற அதிகாரங்களை ஆயுதப்படையினருக்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்ததது.

இதேவேளை, அடுத்தநாள் சனாதிபதி செயலகம் விடுத்த செய்திக்குறிப்பொன்றில் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அவசரகால நிலை குறுகிய காலத்தை அடிப்படையாகக்கொண்டது எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இது குறித்துக் கருத்து வெளியிட்டிருந்த சனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் ஜனதாசப் பீரிஸ் இச்செய்தித் தொடர்பாக ஏற்கனவே வெளிநாட்டு அமைச்சுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகக்கூறினார்.

ஆனால் மூன்றாம் நாள் சனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிவிப்பொன்றில் அவசரகால நிலைமை ஒருபோதும் பிரகடனப்படுத்தப்படவில்லை. அவசர காலநிலைமை பிரகடனப்படுத்தும் அறிவித்தலில் சனாதிபதி கைச்சாத்தும் இடவுமில்லை. அத்துடன் அவ்வாறு அறிவித்தல் அச்சிடப்படவும் இல்லை எனத் தெரிவித்துள்ளது. இத்தனைக்கும் அவசரகாலச் சட்டம் குறித்த தகவலானது ஊகத்தின் அடிப்படையில் வெளியிடப்பட்ட தொன்றல்ல. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்த ஊடகங்களை சனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்று ஊடகத்துறைக்கென புதிய நிர்வாகிகளைத் தெரிவுசெய்தபின்னர் இத்தகவல் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் தற்பொழுது சனாதிபதிச் செயலகம் அது குறித்து மறுப்புத் தெரிவிப்பது ஏன்? சனாதிபதி அவ்வாறொரு உத்தரவை வெளியிடாதுவிட்டால், சனாதிபதியின் பேரில் எவ்வாறு அது அறிவிப்பாக வெளிவர முடியும்? சனாதிபதி உத்தரவிடாது விட்டால் உடனடியாக மறுப்புத் தெரிவிக்கப்படாது போனது ஏன்? ஐ.தே. முன்னணி அரசாங்கத்தில் பொறுப்பற்ற தளமாக அரச ஊடகத்துறை நடந்துகொள்வதாக அதன் அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சனாதிபதி தனக்குக் கீழ் 24மணி நேரத்திற்குள் இத்தகைய தவறுஇழைக் கப்பட்டமைக்கு கூறக்கூடிய காரணம்தான் என்ன?

ஆனால் சனாதிபதி செயலகம் கூறுவதுபோன்று வர்த்தமானி அறிவித்தல் அச்சிடப்படவில்லை என்பது சரியாயினும் கூட சனாதிபதி வாய்மொழிமூலம் இவ் உத்தரவை வழங்கியிருந்தார் என்பதே உண்மையாகும்.

அதாவது உத்தியோகப்பற்றற்ற ரீதியில் ஊரடங்கு அமுல் செய்யப்படுவது போல் அவசர காலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இருப்பினும் எதிர்பார்ப்பிற்கும் மேலாக எதிரான உணர் வலைகள் -குறிப்பாக வெளியுலகில் ஏற்பட்டதினால் சனாதிபதி பினவாங்கிக்கொண்டிருத்தல் வேண்டும். ஆனால் சனாதிபதியின் இந்நட வடிக்கையானது, சிறிலங்கா அரசியல் மாற்றமானது பருவ கால மாற்றத்திற்குரியதல்ல. அயனவலயத்தில் ஏற்படும் அமுக்க இறக்கங்கள்போன்றவை என்பதை வெளிக்காட்டுவதாய் உள்ளது. குறுகிய காலத்திற்குள்தோன்றவும் மறையவும்கூடியது என்பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

# தேச வளர்ச்சியின் அனைத்து செயற்பாடுகளிலும் மக்களின் ஆளுமை மிளிர்வதே தலைவரின் விருப்பாகும்

## அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன்

(அலுவலக செய்தியாளர்)

எமது தேசியத்தலைவர் அவர்கள் எங்கள் தேசத்தின் வருங்கால வளர்ச்சிக்கான அனைத்து செயற்பாடுகளிலும் எங்கள் தேசத்தில் இருக்கும் மக்களே அனைத்துத் துறைகளிலும் மிகவும் திறமையானவர்களாக தமது ஆளுமையை வெளிபடுத்திக் கொள்பவர்களாக இருக்க வேண்டும் என்பதில் மிகுந்த எதிர்பார்ப்புடன் உள்ளார் என நேற்று முன்தினம் கிளி வலயக்கல்விப் பணிமனையில் தமிழீழமாணவர் அமைப்பின் ஆதரவுடன் கிளி.தொழில்நுட்பக் கல்லூரியால் நடத்தப்பட்ட இருநாள் தொழில்சார் பயிற்சி செயலமர்வின் இறுதி நாள் நிகழ்வில் கலந்து சிறப்புரையாற்றுகையில் தழிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது தேசியத் தலைவரின் சிந்தனைக்கும் எதிர்பார்ப்புக்கும் அமைவாக எமது பல்வேறு பிரிவுகளின் செயற்பாடுகளும் அமைந்திருக்கின்றன. இந்த வகையிலேயே இந்த தொழில் சார்பயிற்சி கருத்தமர்வுகளும் அமைந்துள்ளன.

எமது தேசத்தில் இன்று நீங்கள் கற்றுக் கொண்டிருக்கின்ற இரு தொழில் சார் பயிற்சிக்குமான பணிகளில் உள்ளவர்கள் மிகவும் அரிதாகவே உள்ளனர். ஏனெனில் இன்று எங்கள் பிரதேசத்தின் கட்டுமானங்களையும் எமது பகுதியில் நாம் நகர்த்திச் செல்ல வேண்டிய பெரும் பணிகளையும் முன்னெடுத்துச் செல்வதற்கு அனுபவம் வாய்ந்த வல்லுணர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர்.

எமது தேசத்தை நாங்கள் மீண்டும் வளர்த்துச் செல்லதற்கும் திறமையான முறையில் கட்டி எழுப்புவதற்கும் இந்த இரண்டு பணிகளும் மிகவும் முக்கியமானது. இன்று பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களுக்கான தொழிலாளிகள் இன்மையால் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாதுள்ளது. அவ்வாறு முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டங்களை முன்னெடுப்பவர்கள் தென்பகுதியை சார்ந்தவர்களாகவே இருக்கின்றனர். இந்நிலை மாறி எமது மக்களே எமது பகுதிகளில் உள்ள வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அதற்கு இப்பயிற்சி உறுதுணைபுரியும் எனநாம் நம்புகிறோம்.

எமது தேசத்தின் வளர்ச்சிகள் அனைத்தும் வருங்கால சந்ததிகளான உங்களிடமே உள்ளது.

எமது தேசத்தில் கட்டப்படுகின்ற ஒவ்வொருகட்டுமானங்களும் நீண்ட நோக்கங்களைக் கொண்டதான கட்டுமானங்களாகவே அமைந்து கொண்டிருக்கிறது.

எமது மாவட்டங்கள் அனைத்தும் பெரும் யுத்தத்துக்குமுகம் கொடுத்தது, பெரும் அழிவுகளை சந்தித்தது. இதனால் எமது மக்கள் பெருமளவு இழப்புக்களை சந்தித்தனர். அவ்வாறு இழந்தவர்களை மீண்டும் தம்மால் இயன்ற அளவு அந்த கட்டுமானங்களை ஆரம்பித்திருக்கிறார்கள். எனவே மக்களின் அத்தகைய தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் இந்தக் கற்கை நெறி அமைந்திருக்கிறது. எங்கள் தேசத்தில் நாம் அனைவரும் அனைத்து துறைகளிலும் சிறந்தவர்களாகவும் வல்லுணர்களாகவும் வளர வேண்டும் என்பதே எமது விருப்பு எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (லோ)

# நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலையை பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும்

## கூட்டு வர்த்தக மன்றம் வேண்டுகோள்

சனாதிபதி -பிரதமர் மற்றும் ஏனைய சகல கட்சிகள் என்பன நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலையை பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டுமென கூட்டு வர்த்தக மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இனப்பிரச்சினைக்கும் அரசியல் நெருக்கடிக்கும் தீர்வு காண்பதற்கு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டுமென இம் மன்றம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் அரசியல் லாபம் ஈட்ட முற்படாமல் பிரச்சினைகளை தீர்த்துவைக்கு மாறும் இதில் கூறப்பட்டுள்ளது.

சமாதான நடைமுறைகள் இப்பொழுது முக்கியமான காலகட்டத்தை எய்தியுள்ளன. நாட்டில் சமாதானத்தையும் ஸ்திர நிலையையும் நிலைபெறச் செய்வதன் மூலம் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து தேசிய சுபீட்சத்தை உறுதிப்படுத்த முடியும் என அவ் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில் அரசும், எதிர்க்கட்சியும் கூட்டாகச் செயற்படுவதன் அவசியத்தை கூட்டு வர்த்தக மன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. இவ் அறிகையை இலங்கை வர்த்தக சம்மேளனம், இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனம், தேசிய கைத் தொழில் சலவை கைத் தொழில் வர்த்தக சம்மேளனம், வேலை கொள்வோர் சம்மேளனம், ஏற்றுமதியாளர்கள் சங்கம் ,மற்றும் பல வர்த்தக அமைப்புக்கள். விடுத்துள்ளன.

# நீர் பங்கீட்டு சட்டமூலத்தை எதிர்த்து மூன்று மனுக்கள் தாக்கல்

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நீர் பங்கீட்டுசட்ட மூலத்தை எதிர்த்து மூன்று அடிப்படை மீறல் மனுக்கள் உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதில் ஒன்று மக்கள விடுதலை முன்னணி ஏனைய இரண்டும் சட்டத் தரணி மற்றும். பொது மகன் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.நீர் பங்கீட்டு சட்ட மூலத்தின் மூலம் தேசிய வடிகால் அமைப்பு சபையின் முழுமை அதிகாரம் இழக்கப்படுகிறது. அதே நேரமடினால் நீர் விநியோகத்தில் மக்களுக்கான பாதிப்பு அதிகரிக்கும் நிலை ஏற்பட விருப்பதாயும் மனுதாரர்கள் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

# பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விரைவில் தீர்மானிக்கும்

இந்திய அணியின் பாகிஸ்தான் பயணத்திற்கான திகதி, போட்டி நடைபெறும் இடங்கள், விளையாடப்படும் போட்டிகள் குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவு செய்யவில்லை.

இந்திய கிரிக்கெட் அணி அடுத்த ஆண்டு மார்ச் மாதம் பாகிஸ்தான் செல்ல திட்டமிட்டுள்ளது. இந்தப் பயணத்திற்கான திகதி, போட்டி நடைபெறும் இடங்கள் விளையாடப்படும் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளின் எண்ணிக்கை போன்றவை இன்னமும் முடிவு செய்யப் படவில்லை.


"அடுத்த வாரம் வரை இது குறித்து தற்காலிக முடிவை எங்களால் எடுக்க முடியாது. அதன்பிறகு இந்திய கிரிகெட் சபைக்கு பயணத்திட்டத்தை அனுப்பி அனுமதி பெறுவோம்" என்று பாகிஸ்தான் கிரிகெட் சபைத்தலைமை நிர்வாகி ரமீஸராகா தெரிவித்தார்.

மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடைபெறவிருக்கும் இநதத தொடருக்கான புதிய அட்டவணையை அனுப்புமாறு இந்தியா கேட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளா.

# நியூசிலாந்து வீரருக்கு 2500 டொலர் அபராதம்

நியூசிலாந்து கிரிக்கெட் வீரர் ஸ்கொட் ஸ்டைரிஸ"க்கு 2,500 டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.வியாழக்கிழமை நடைபெற்ற இந்திய அணியுடனான போட்டியில் முரளி கார்த்திக்கின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஸ்டைரிஸ் ஆட்டமிழந்தார். எனினும் நபரின் தீர்ப்பை ஏற்க மறுத்த அவர் நடுவர் அருகே சென்று கெட்ட வார்த்தைகளால் திட்டினார். இதனையடுத்து ஸ்டைரிஸிக்கு போட்டி மத்தியஸ்தர் ரஞ்சன் மடுகல்ல அபராதம் விதித்துள்ளார்.

ஸ்டைரிஸ் அன்றைய சிறப்பாட்டக் காரராகத் தெரிவானமை குறிப்பிடத்தக்கது.



# ஆஸி-நியூசிலாந்து அணிகள் இன்று சந்திப்பு.......

இந்தியாவில் நடைபெற்றுவரும் மூன்றுநாடுகள் பங்குபற்றும் ஒருநாள் சர்வதேசகிரிக்கெட் தொடரில் அவுஸ்திரேலிய அணியை எதிர்த்து நியூசிலாந்து அணி இன்று மோதவுள்ளது.

இப்போட்டி இந்தியாவின் வேகாத்தியில் இடம்பெறவுள்ளது.

இத் தொடரில் அவுஸ்திரேலிய அணி ஏற்கனவே இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், இந்தியாவும் நியூசிலாந்தும் தலா ஒன்பது புள்ளிகளுடன் உள்ளன.

# கொழும்பில் தேடுதல் நடவடிக்கை
# 24 மணி நேரத்தில் 45 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போது 45 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருப்பதாக கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் காலை 6.00 மணி முதல் நேற்றுக் காலை 6.00 மணி வரையான 24 மணித்தி யாலத்திற்குள் நடத்தப்பட்ட தேடுதலின்போதே இந்தக் கைதுகள் இடம்பெற்ற தாகவும், 128 வீதித் தடைகள் போடப் பட்டுச் சோதனைகள் நடத் தப்பட் டுள்ளதுடன் 64 ரோந்து நடவடிக் கைகளும் மேற்கொள் ளப்பட்டுள் ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## - இந்து, முரசொலி பத்திரிகைகளின் -
# ஆறு ஊடகவியலாளர்களைக் கைது செய்ய தமிழக சட்டசபை உத்தரவு

(சென்னை)

இந்து-முரசொலி ஆகிய பத்திரிகைகளின் ஆறு ஊடகவியலாளர்களைக் கைது செய்யுமாறு தமிழக சட்டசபை உத்தரவிட்டுள்ளது.

இந்து பத்திரிகையின் ஆசிரியர் ராம், நிர்வாக ஆசிரியர், பதிப்பாளர் மற்றும் இரண்டு செய்தியாளர் மற்றும் முரசொலி பத்திரிகையின் மொழிபெயர்ப் பாளரையும் கைது செய்து 15 நாட்களுக்குச் சிறையில் வைக்கு மாறு தமிழக சட்டசபை உத்தர விட்டுள்ளது.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா சட்ட சபையில் நடந்து கொண்ட விதத்தை இந்து பத்திரிகையின் இரண்டு செய்தியாளர்கள் கண்டித்து எழுதியதை நியாயப்படுத்தி அந்தப் பத்திரிகையில் ஆசிரிய தலையங்கம் வெளியிடப்பட்ட தற்காகவே தமிழக சட்டசபை இந்த உத்தரவைப் பிறப்பித் துள்ளது.

இந்துப் பத்திரிகையில் பிரதம ஆசிரியர் ராம் தமிழக சட்ட சபையின் உத்தரவுக்கெதிராக உயர் நீதிமன்றில் கொடுத்த மனுவை உயர்நீதிமன்று விசா ரணைக்கென ஏற்றுக் கொண்டி ருக்கிறது. அத்துடன் தமிழக பத்திரிகையாளர் தமிழக சட்ட சபையின் உத்தரவை பலமாகக் கண்டித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இந்துப் பத்திரிகையின் சென்னை அலுவலகம் தமிழக காவல் துறையினரால் சோதனையி டப்பட்டது.

மாநில அரசு தனது அதி காரத்தை துஷ்பிரயோகம் செய்து பத்திரிகைச் சுதந் திரத்தை ஒடுக்குகின்றதென நேற்றைய இந்து செய்தித்தாள் கண்டித்துக் கட்டுரை வெளி யிட்டுள்ளது.

டில்லியிலுள்ள பிற செய்தித் தாள்களின் ஆசிரியர்களும் தமிழக அரசின் நடவடிக்கை யைக் கண்டித்துள்ளனர். இன்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவும் சென்னைச் செய்தி யாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

## ரணிலின் வரவேற்பில் ஊழியர் கலந்து கொண்டனர்
# கைத்தொழில் அமைச்சின் செயலாளருக்கு எதிராக சனாதிபதி ஒழுக்காற்று நடவடிக்கை

கைத்தொழில் அமைச்சின் செயலாளர் ரஞ்சித் பெனாண்டோ வுக்கு எதிராக ஒழுக்காற்று நட வடிக்கையை எடுக்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கட்டளை யிட்டுள்ளதாக சனாதிபதியின் செயலகம் கூறியது. சுதந்திர வர்த்தக வலயத்திற்குட்பட்ட தொழிற்சாலைகளின் ஊழியர் கள் பிரதம மந்திரியின் வர வேற்பு கொண்டாட்டத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்ட மைக்கு எதிராக இந்நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அடுத்த கிழமை பெனாண்டோ வுக்கு எதிராக ஒழுக்காற்று நடவ டிக்கை எடுக்க சனாதிபதி செயல கம் திட்டமிட்டுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# நாட்டை சனாதிபதி பாதுகாத்துள்ளார்
## தினேஷ் குணவர்த்தன

சனாதிபதி பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை பொறுப்பேற்றதன் மூலம் தாய் நாட்டை பாதுகாத்துக் கொண்டார் என தினேஷ் குணவர்த்தன கூறியுள்ளார். இது தொடர்பாக சனாதிபதி தொடர்ந் தும்உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென நேற்று முன்தினம் ஹைட்பார்க் பூங்காவில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் தெரிவித்துள்ளார்.

# வீரதுங்க மரணம்

சிறிலங்கா முன்னாள் இராணுவக் கட்டளைத் தளபதி வீரதுங்க நேற்று முன் தினம் கொழும்பில் காலமா னார். இவர் 1985ஆம் ஆண்டு முதலாவது கூட்டுப்படைத் தளபதியாக நியமிக் கப்ப ட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

# இரு அமெரிக்கப் படையினர் பலூஜா நகரில் பலி

(பாக்தாத்)

ஈராக் தலைநகர் பாக்தாத்திற்கு மேற்கே பலூஜாவில் இராணுவ கவச வண்டி ஒன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதில் இரண்டு அமெரிக்கச் சிப்பாய்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சதாம் ஹுசைனின் சொந்த ஊரான திக்ரிட்டில் அமெரிக்கப் போர் விமானங்கள் நேற்று குண்டு மாரி பொழிந்துள்ளன.

# கொரிய வைத்தியகுழுவினர் திடீரென கொழும்பு திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

கொரியநாட்டின் வைத்திய நிபுணர்கள் அடங்கியகொம்ரா வைத்திய நிபுணர்கள் குழு யாழ். இல் இருந்து அவசர அவசரமாக கொழும்பு திரும்பியது.

இலங்கைக்கான கொரிய தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ். கைதடி சித்த ஆயுர்வேத போத னா வைத்தியசாலையில் நடத் தப்பட்ட இலவச வைத்திய சேவைக்காக யாழ்.வருகைதந்து சேவையாற்றிய 16நிபுணர்கள் அடங்கிய குழுவினர் தற்போது சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள அர சியல் பதற்ற நிலையைத் தொட ர்ந்து சேவைக்கென திட்டமிடப் பட்டிருந்த காலம் முழுமையாக பூர்த்தியாக முன்னரே திரும்பிச் சென்றுள்ளனர். (32)

# கொள்ளையரைத் தேடிய மோப்ப நாய் இராணுவக் காவலரண் சென்றது

வவுனியாவில் சிவபுரம் என்ற இடத்தில் ஒரு வீட்டில் கொள் ளையடித்த பொருட்களைப் பிடிப் பதற்கு மோப்ப நாய் உதவியு டன் பொலிசார் தேடுதல் வேட்டை நடத்தியவேளை, அந்த மோப்ப நாய் நேரடியாக வவுனியா இரா ணுவக் காவலரண்களுக்குச் சென்றுள்ளது. கொள்ளையடிக் கப்பட்ட பொருட்கள் இராணுவக் காவலரண்களில் இருக்கலாம் என உயர் பொலிஸ் அதிகாரி டி.கே. மிஸ்கின் அறிவித்துள் ளார். இந்தக் கொள்ளைச் சம்ப வத்திற்குப் பாவிக்கப்பட்ட ரி.56 ரகத் துப்பாக்கியும் கொள்ளை யர்கள் பாவித்த உடுப்பையும் மோப்பம் பிடித்ததில் இந்த நாய் இராணுவ காவல் அரணிற்குள் சென்றுள்ளது.

# மின்னல் தாக்கிச் சிறுவன் மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-குருமண் வெளி பிரதேசத்தில் நேற்றுக் காலை 13 வயது சிறுவன் ஒரு வன் மின்னல் தாக்கியதில் உடல் கருகி மரணமடைந்துள்ளார். குருமண் வெளியைச் சேர்ந்த எஸ். நிரோஜன் என்ற சிறுவனே மரணமடைந்துள்ளார்.

வீட்டில் இருந்தவேளை, மின்னல் தாக்குதலுக்கு இச் சிறுவன் உள்ளாகியுள்ளார்.

# ஐ.நா. அமைதிப்படைக்கு சிறிலங்கா இராணுவம்

ஐக்கியநாடுகள் சமாதானப் படைக்கு இராணுவத்தை அனுப் புவதற்கு சிறிலங்கா அரசாங்கம் உடன்பட்டுள்ளது. இதற்கான வேண்டுகோளை இராணுவம் விடுத்துள்ளதாக ஜெனரல் பலகல்ல கூறினார். எனினும் யுத்தம்நடைபெறும் இடங்களில் சிறிலங்கா இராணுவத்தினர் நிறுத்தப் படமாட்டார்கள் என இராணுவத் தளபதி கூறினார். சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நாடுகளுக்கு மட்டுமே இவர்கள் அனுப்பி வைக்கப்படுவர் என அவர் கூறி னார். தற்போது சிறிய அளவு படைகள் சமாதான அமைப்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். முடிந்தளவு படையினர் வெளி நாட்டுப் படைகளுடன் சேர்ந்து பயிற்சி பெறுவதால் அனுபவங் களைத்தரும் சந்தர்ப்பங்கள் உண் டெனவும் இதனால் பொருளாதார நன்மைகளும் ஏற்படுமென எதிர் பார்க்கப்படுவதாகவும் பல கல்லை மேலும் கூறினார்.

# செய்திச்சேவை கணக்கை முடக்க ஐ.ரி.என். தொலைக்காட்சி முடிவு

(கொழும்பு)

ஐ.ரி.என். எனப்படும் சுயாதீன தொலைக்காட்சியின் செய்திச் சேவைக்கணக்குகளை முடக்கி வைக்க அந்த நிறுவன பணிப் பாளர் சபை முடிவெடுத்துள்ளது.

அரசியல் நெருக்கடியின் மத்தியில் அந்த நிறுவனத்துக்கு புதிய தலைவர் ஒருவரை சனாதிபதி நியமித்ததை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. சுயாதீன தொலைக்காட்சி சேவை திறைசேரியின் நிர்வா கத்தின் கீழ் வரும் சேவையா கும். எனவே அதை புதிய தலைவரை நியமிக்கும் போது திறைசேரியின் அனுமதி யைப்பெற வேண்டும். எனவே அந்த அனுமதியை சனாதிபதி பெறவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (32)

# த.வி.கூட்டணி ஆராய்வு

(திருமலை)

தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கொழும்பில்கூடி கொழும் பின் இன்றைய அரசியல் நில வரம் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.

பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தின் முடி வில் அறிக்கை ஒன்றும் வெளியிடு வதாக அறிவிக்கப்பட்டது. (25)

# யாழ். குருநகர் கடற்பரப்பில் ராட்சத மீன் சுடப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர் கடற்பகுதியில் சுமார் 15 அடி நீளமான இராட் சத மீன் ஒன்று கடற்படையின ரால் சுட்டுக்கொல்லப்பட்டது.

நேற்றைய தினம் யாழ். குருநகர் தொடர்மாடியை அண்டிய பகுதியில் நடைபெற்ற இச சம்பவம் பற்றி தெரிவிக் கப்படுவதாவது,

வழமைபோல் மேற்படி கடலில் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டி ருந்த மீனவர்களின் வலையில் சிக்குண்ட இவ் இராட்சத மீன் அவ வலைகளை அசுரவேகத்தில் அறுத்து நாசம் செய்ததுடன் ஆழ் கடலுக்கு மீனவர்களையும் இழுத் துச் செல்லும் அபாயநிலை ஏற் பட்டதையடுத்து கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளது. (33)

# நாகவிகாரை...

குவிக்கப்பட்டு கடமையில் ஈடுப டுத்தப்பட்டதுடன் விசேட ரோந் துகளும் இடம்பெற்றன. (33)

# சமாதான...

சியல் நோக்கத்தைக் கொண்டி ருந்தார். இதனால் இன்று அரசியல் ஸ்திரமற்ற தன்மை ஏற்பட்டுள்ளது என்றும் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

# கொழும்பை...

காரணங்களுக்காகசகல ஐக்கிய தேசிய முன்னணி பாராளுமன்ற உறுப் பினர்களை ஒரு இடத்தில் இருக்குமாறும் அறிவித்தல்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

# அமைச்சுக்களை...

பறித்தவையை எம்மிடம் வழங்க வேண்டும். அதன் பிறகுதான் நாங்கள் பேச்சுவார்த்தைக்கோ அல்லது ஏனைய விடயங்களுக் கோ அல்லது தேசிய அரசாங் கம் என்பதற்கோ பேசமுடியும் என்றார்.

ஐ.தே. முன்னணி அரசாங்கத் தின் மூன்று அமைச்சர்களை பதவி நீக்கிய இரண்டாம் நாளான நேற்று முன்தினம் இரவு தொலைக்காட்சியில் உரைநிகழ்த்திய சனாதிபதி சந்திரிகாதேசிய புனரமைப் பிற்குத் தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைக்கும் தனது முயற்சியில் இணைய வருமாறு அனைத்துக்கட்சி களுக்கும் அழைப்பு விடுத்திருந் தது தெரிந்ததே.

இந்த அழைப்பு குறித்து கருத்துக் கூறும் போதே அமைச் சர் அஸ்வர் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பாக்தாத் அலுவலகம் மூடப்பட்டது

சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தி லும் தென்பகுதிநகரான பஸ்ராவிலும் அமைந்துள்ளதான அலுவல கங்களை தற்காலிகமாக மூடியுள்ளது. இச்சங்கத்தின் தலைமை அலுவலகம்தற்கொலைத் தாக்குதலில் தகர்க்கப்பட்டு இரண்டு வாரங் களாகியுள்ள நிலையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளது. பாதுகாப்பற்ற மிக அபாயகரமான சூழல் நிலவுவதாகச் செஞ்சிலுவைச் சங்க அதிகாரி கூறியுள்ளார். இருப்பினும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து மறுபரிசீலனை நடைபெறுவதாகவும் அவ் அதிகாரி கூறியுள்ளார். இதேவேளை ஈராக்கின் வடபகுதி நகரமான மொசூலையில் செஞ்சிலுவைச்சங்கம் தொடர்ந்து இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ராணுவம்...

கின்றார் என்பதையும் அதைத் தடுக்க அவர் விரும்புகின்றார். என்பதையும் அவரது நேற்று முன்தின உரை காட்டுகிறது.

அத்துடன் விடுதலைப்புலி களைக் கலந்தாலோசிக்காமல் நோர்வே ஏற்பாட்டாளர்களின் பங்களிப்பில் சனாதிபதி சந் திரிகா மாற்றங்களைச் செய் தால் விடுதலைப் புலிகள் கோபத்துடனேயே அதற்கான பிரதிபலிப்பைச் செய்வார்கள் என்றும் அவர் கூறியுள்ளார்.

# பாராளுமன்ற...

சர் பாராளுமன்றம் தொடர்பான பூரண அதிகாரம் சபாநாயக ருக்கு உண்டு. எனவே பாராளு மன்றத்தை மீண்டும் கூட்டுமாறு கட்சித் தலைவர்கள் கூட்டாகக் கேட்டுக்கொள்ள இருக்கின்றனர் எனத் தெரிவித்தார்.

சனாதிபதியின் தன்னிச்சை யான தீர்மானங்கள் அவர் சனா திபதி பதவிக்குத் தகுதியற்றவர் என்பதை வெளிப்படுத்தியுள்ளது. அதிகாரங்கள் அதிகமாக இருக் கும் வேளை அதனைப் பயன் படுத்தும்போது சிந்தித்து செயற் படுத்த வேண்டும். உயர் நீதிமன் றம் தீர்மானம் ஒன்றை எடுப்ப தற்கு முன்னர் சனாதிபதி தீர்மா னத்தையெடுத்து உயர் நீதிமன் றத்தின்தீர்மானத்தை உறுதிப் படுத்த முனைகின்றார் என அவர் மேலும் கூறினார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.